# செய்யுட் சிதறல்



புலவர், பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய்



புலவர், பொறிஞர்

# செந்தமிழ்ச்சேய்

## நூல் வரிசை

சோலை மலர் - பாவியம் - 1969

செம்பியன் தமிழவேள் - வரலாற்றுப் புதினம் - 1992

பூம்பொழில் - பாவியம் - 1993

பூக்காடு - தனிப்பாடல்கள் - 1998

உயிரே எனக்காக - நாடகம் - 2000

காதற் களிவெண்பா - பாவியம் - 2004

செம்பியன் தமிழவேள் - வரலாற்றுப் பாவியம் - 2009

இன்பால் இனிது - பாவியம் - 2017

இன்றமிழ் இலக்கணம் - தொல். எழுத்துரை - 2018



# செய்யுட் சிதறல்

புலவர் - பொறிஞர்
சி. செந்தமிழ்ச்சேய்.

# நூல் பற்றி


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | செய்யுட் சிதறல் |
| ஆசிரியர் | : | **புலவர் - பொறிஞர் சி.செந்தமிழ்ச்சேய்** |
| பொருள் | : | பல்பொருள் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| வெளியீடு | : | திசம்பர் – 2024 |
| உரிமை | : | நூலாசிரியர்க்கு |
| பக்கங்கள் | : | 79 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| நூல் அளவு | : | டெமி |
| விலை | : | உருபாய் - 75.00. |
| வெளியீடு | : | **பொறிஞர் சா.வேல்முருகன்,**<br>14, துரைசாமி நகர்,<br>கடலூர் - 607 001.<br>+91- 94443 54945. |
| ஒளி அச்சு | : | **பா. இளந்திரையன்,**<br>திரையன் கணினியகம்.<br>கடலூர்- 607 001 |
| அட்டை | : | **ஓவியர் இரமேசு,** கடலூர் - 1. |
| அச்சாக்கம் | : | **சபாநாயகம் அச்சகம்,**<br>176, கிழக்கு இரத வீதி,<br>சிதம்பரம் - 608 001.<br>04144-223040 7373333162<br>sabanayagamprinters@gmail.com |

# என்னுரை:

**"என்ன வெழுதினென் யாருமிங் கேற்பரிலே**
**லுன்னி னுறுத்து முளம்."**

(என்ன எழுதின்என் யாரும்இங்கு ஏற்பர்இலேல்
உன்னின் உறுத்தும் உளம்.)

பல ஆண்டுகளாக ***"இன்றொரு செய்யுள்"*** என்ற தலைப்பில், முகநூலில் அவ்வப்பொழுது எழுதிப் பதிவிடப் பெற்ற பாடல்களின் தொகுப்பே இச்சிறு நூல். சிறு சிறு செய்யுட்கள்; தனித்தனிக் கருத்துக்கள்! சிந்தனைச் சிதறல் இந்நூற்கு மூலம் என்பதால், **"செய்யுட் சிதறல்"** எனப் பெயர் இடப்பெற்றது.

இந்நூல் வெளிவரற்கு வித்திட்டவர் பொறிஞர் **சா.வேல்முருகன்** ஆவர்! மின்வாரியத்தில் நேரிய முறையில் நிறைவாகப் பணியாற்றித் தலைமைப் பொறியாளராக ஓய்வு பெற்ற என் இனிய நண்பர்.

**"எளிமையான இனிய இலக்கணச் சொற்கள் கொண்ட கவிதை. இது போன்ற தனிப்பாடல்களைத் திரட்டி அச்சேற்றி வெளியிடலாமே!"** என்று 24-07-2015 அன்றே தன் கருத்தை என் செய்யுள் ஒன்றிற்குப் பின்னூட்டமாகத் தெரிவித்திருந்தார். அக்கருத்தையே 9-8-2018 அன்றும் **"தொடர்ந்து கவிதை எழுதுங்கள். மகிழ்ச்சி! மீண்டும் ஒரு பூக்காடு எங்கட்குக் கிடைக்கும்; தொகுப்பைப் பதிப்போம். ஆவலுடன் காத்திருக்கிறேன்."** என வலியுறுத்தி, மீண்டும் நினைவூட்டிய கைம்மாறு கருதாத அவர்க்கு என்றும் போல், இன்றும் நன்றி.

இச்சிறு நூல், முற்றும் மரபு செய்யுட்களால் அமைந்தது; இலக்கண மரபு பிறழாது புணர்ச்சி விதிகட்கு உட்பட்டு இயற்றப்பட்டது. செய்யுட் பயிற்சி மிக்கவர்க்கே அன்றிப் பிறற்கு எளிதில் படித்துப் புரிந்து கொள்ளுதல் கடினம் என்று நண்பர் சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர்; எனவே, ஒவ்வொரு செய்யுட்கும் கீழேயே அடைப்புக் குறிகட்கு இடையே அச்செய்யுளைச் சொற்பிரித்து, எளிதில் பொருள் விளங்குமாறு தரப் பெற்றுள்ளது. பிழை இருக்கலாம்; காணின் பொறுக்கவும்.

இந்நூலை மீண்டு மீண்டும் படித்துப் பிழைகளைச் சுட்டித் திருத்த உதவியதோடு, வெளியீட்டிற்கும் உறுதுணையாய் நின்ற பொறிஞர் சா. **வேல்முருகனார்**க்கு மீண்டு நன்றி.

இந்நூல் வெளியீட்டில் மிகவும் ஆர்வம் காட்டியதோடு, இந்நூலை முற்றும் படித்துத் தன் கருத்துக்களை அவ்வப்போது பகிர்ந்தும் ஓர் அன்புரை அளித்தும் மகிழ்வித்த இனிய நண்பர், அன்பர், கவிஞர் - வழக்குரைஞர் **கோ. மன்றவாணன்** அவர்க்கு நன்றி உடையேன். அவரின் நுண்மாண் நுழைபுல நோக்கால் இந்நூல் அமைப்புச் சிறப்புற்றது என்பதில் மிக்க மகிழ்ச்சி!

என் நூற்கு என்றும்போல் ஓர் இன்னுரை அளித்த நண்பர். வழக்குரைஞர் **சீனி. சிவானந்தம்** அவர்க்கு நன்றி.

ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், அன்பர், இனிய நண்பர் **புலவர் அழகப்பனாரின்** சீர்மிகு ஆய்வுரை இச்சிறு நூற்கு அமைந்தது, மிக்க சிறப்பு! அவர்க்கு மிக்க நன்றி.

அட்டைப் படம் அழகுற அமைத்தளித்த **ஓவியர் இரமேசு,** வேண்டியாங்கு நூலை அச்சிட்டு உதவிய நீணாள் நண்பர் - சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமைநாளர் **கௌதம சங்கர்** ஆகிய இருவர்கரும் மிக்க நன்றி.

புலவர் - பொறிஞர்:
**சி. செந்தமிழ்ச்சேய்.**

# ஆய்வுரை:

புலவர் **மு. அழகப்பன்**,
மேனாள் தலைமையாசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி,
கடலூர் - 607001,

***எந்தவோர் துறைதொட் டாலும்***
***இன்னுயிர் சிலிர்க்கப் பாடும்***

மந்திரம் கற்றவர் தான் இலக்கணப் பாவலர் புலவர் பொறிஞர் சி.செந்தமிழ்ச்சேய் அவர்கள்.

சங்க காலத்தில்தான் கணியன் (சோதிடர்) பூங்குன்றனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், அறுவை வாணிகன் (துணிக் கடை) இளவேட்டனார், கூல வணிகன் (தானிய மண்டி) சீத்தலைச் சாத்தனார் என்று சோதிடரும், மருத்துவரும், துணிக்கடை வணிகரும், தானியம் விற்பவரும் புலவர்களாக இருந்தார்கள் என அறிகின்றோம். இன்றைய உலகில் பாவலர் என்றால், பெரும்பாலும் ஆசிரியர்களாகவோ, பேராசிரியர்களாகவோ இருப்பார்கள். ஆனால், செந்தமிழ்ச்சேயோ மின்வாரியத்தில் மேற்பார்வைப் பொறியாளராக இருந்து கொண்டு புலவர் படித்துத் தொல்காப்பியமே துணையெனக் கொண்டு மரபு மாறாமல் செய்யுள் நூற்கள் பல படைத்துள்ளார்; தமிழக அரசின் பரிசும் பெற்றுள்ளார் எனில் யார்தாம் வியக்காமல், பாராட்டாமல் இருக்க முடியும்?

இன்றமிழ் இலக்கணம் என்று தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்குத் தொகுப்புரை எழுதியது மட்டுமல்லாமல், ஒவ்வோர் இயலிலும் உள்ள செய்திகளைப் பட்டியலிட்டுத் தொகுத்து அளித்துள்ளது யாரும் செய்யாத ஒன்று; பாராட்டுக்குரியது. தமிழ்ப் பல்கலைக் கழகமும், பிற பல்கலைக் கழகத் தமிழ்த்துறையும் போற்றிப் பயன்படுத்திக் கொள்ளத் தக்கது.

தமிழுக்கும் தமிழர்க்கும் பெருமை சேர்ப்பது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல். மொழி என்பது எழுத்தும் சொல்லும் சேர்ந்தது மட்டுமல்ல. அந்த எழுத்தையும் சொல்லையும் பயன்படுத்துகின்ற மக்களின் வாழ்க்கை முறையையும் (அகவாழ்வு, புறவாழ்வு) விளக்குவதாக அமைய வேண்டும். அப்படி அமைந்ததுதான் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று இலக்கணங்களையும் உள்ளடக்கிய மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியரால் இயற்றப்பட்ட ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் என்னும் நூல்.

எழுத்தையும் சொல்லையும் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது மட்டும் இன்றியமையாததல்ல. அவற்றைப் பயன்படுத்தி எப்படி வாழ்கின்றான்? வீட்டிற்குள்ளே ஒருவனும் ஒருத்தியும் வாழ்கின்ற வாழ்க்கை முறையான அகப் பொருள், வீட்டிற்கு வெளியே (புறத்தே) எப்படி நடந்து கொள்வது, நட்புப் பாராட்டுவது, போர்புரிவது, உதவி புரிவது போன்ற (புறப்பொருள்) செய்திகளையும் கூறுவதுதான் அழகு. அதுதான் இலக்கணம். அந்த இலக்கணம்தான் தொல்காப்பியம்.

சமம் என்ற சொல்லுக்குப் போர் என்று பொருள். ஒளிருவாள் அருஞ்**சமம்** முருக்கி (புறநானூறு) (வாட்போரில் பகைவரை அழித்து) சமமானவர்களோடு புரிவதுதான் போர். அதனால்தான் பண்டைக் காலத்தில் யானை, தேர், குதிரை, காலாள் என நால்வகைப் படைகள் இருந்தன. யானைவீரன் யானை வீரனோடும், குதிரை வீரன் குதிரை வீரனோடும், தேர்மேல் இருப்பவன் தேர்மேல் இருப்பவனோடும், தரையில் இருப்பவன் தரையில் இருப்பவனோடும் மட்டும்தான் போர்புரிய வேண்டும்! அதுதான் தமிழர் வீரம். தோற்றோடுபவனோடு போர் தொடுக்கக் கூடாது. இன்றைய நாகரிக உலகில் என்ன நடக்கின்றது? இப்போது **அமரர் ஊர்தி** என்று எழுதி நோயுற்று இறந்தவன், கொரானாவில் இறந்தவன், தற்கொலை செய்து கொண்டவன் எல்லோரையும் ஏற்றிச் சென்று அடக்கம் செய்கின்றார்கள். அவ்வாறு எழுதுவது தவறு. அமர் என்றால் போர். போரில் இறப்பவர்கள் மட்டுந்தாம் அமரர். ‘‘அமரர்கட் பட்ட அறுவகை யானும்’’ என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

**“திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும்**
**பொருந்திய தூய்மொழி புகல்செம்மொழியாம்! ”**

தமிழ் செம்மொழி என்பதற்குக் காரணமே தொல்காப்பியப் பொருளதிகாரம் மற்றும் எழுத்தும் சொல்லுமேயாகும்.

திருந்திய பண்பு – அகவாழ்வு (அகப்பொருள்)
சீர்த்த நாகரிகம் – புறவாழ்வு (புறப்பொருள்)

மேற்கண்ட காரணங்களால்தாம், செந்தமிழ்ச்சேய் அவர்கள் தொல்காப்பியமே துணை என எழுதுகின்றார். பின்பற்றுகின்றார். நல்லவர் உள்ளங்களில் வாழ்கின்றார்.

தற்பொழுது **“செய்யுட் சிதறல்”** என்ற படைப்பு இன்பால், வாழ்த்துப்பால், பொருட்பால், தமிழ்ப்பால், பிறபால் என அய்ந்து பகுதிகளாக, எண்வகைப் பா, பாவினங்களை உள்ளடக்கிச் செய்யுள் வடிவில் வருகின்றது. வாழ்க்கைத் துணை நலம் என்பார் திருவள்ளுவர். வாழ்க்கைக்குத் துணையாக இருக்க வேண்டும்; நல்லவற்றுக்குத் துணையாக இருக்க வேண்டும். நூலாசிரியர் தன் துணைவியை என்னவள், நல்லவள், அன்பின் வைப்பு, கவினுரு, உணர்வே அவர்தான் என்கின்றார். இருதலைக் கொள்ளி எறும்பு போல என்ற உவமையை,

**“இருதலை எரிகழி இடையுறு எறும்பென”**

ஒரு பக்கம் உயிர், மறுபக்கம் உணர்வு; இரண்டிற்கும் இடையில் தெளிவில்லாமல் கடல் அலையென மனநிலையுடன் இருக்கின்றேன் என்கின்றார். மனிதனுக்கு ஆடை மிகமிக இன்றியமையாதது. பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, பாஞ்சாலியின் துகிலை உரியும் போது, “ஆவி இழக்கலாம்; ஆடை இழக்கலாமோ?” என்று பாடுகின்றார். ஆவியைவிட ஆடை மேலானது. நூலாசிரியர் தன் துணைவியை ஆடையாக இருந்து தனக்குப் பெருமை சேர்க்கின்றார்; அவரில்லையேல் தனக்குப் பெருமை இல்லை என்கின்றார். நவில் தொறும் நூல் இன்பம் பயப்பதுபோல், தமிழ்தரு சுவையைப் போல் அன்பு காட்டுகின்றார் என்கின்றார். நலம்அளி காதற்கூட்டாகிய நீயின்றேல் நானில்லை என்கின்றார். என்னே அன்பு!

“உடம்பொடு உயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு!”

என்ற குறட்பாவை (1122) நினைவூட்டுகின்றார்.

வாழ்த்துப் பகுதியில் பொங்கல் வாழ்த்து, பெயரன் பிறந்த நாள், நண்பர் மணநாள் வாழ்த்து, பெயர்த்தி, தன்னைப் புலவராக்கிய போராசிரியர் செல்வ கணபதி ஆகியோருக்கு வாழ்த்துப் பாடுகின்றார். ஏர், எருது, இயந்திரம் ஆகியவற்றுக்கு நன்றி காட்டும் விழாவான பொங்கல் நாளில், மகிழ்ச்சி பொங்கட்டும் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் குலம், சமய வேறுபாடு எண்ணாமல் யாவரும் நல்லவராய் அன்பில் திளைக்கட்டும் என்கின்றார். எத்தகைய உயரிய மனநிலை! பெயரனுக்கு வாழ்த்துரைக்கும் போது நல்லொழுக்கத்தை முன்னிறுத்துகின்றார்! ஒழுக்கம் உயர்வு தருமல்லவா? அவருடைய நண்பர் மின்வாரியத் தலைமைப் பொறியாளர் திரு வேல்முருகன் அவர்களையும் அவருடைய துணைவியாரையும் (மீனாட்சி) ஆல்போல் உயர்ந்து, தழைத்து வாழ வாழ்த்துகின்றார். ஆலமரம் மட்டும்தான்,

“அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகும்மே” - நறுந்தொகை-1

என்பது போல் பலருக்குப் பாதுகாப்புத் தரும். நன்மை செய்யும். எண்பதாம் வயதில், எண்ணத்தில் சேய்தான் என்று பாடுகின்றார். ஏற்றுக் கொள்ள முடியுமா? அவருள்ளம் தூய உள்ளம், அன்பு உள்ளம், தொண்டுள்ளம், தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் அல்லவா? வாழ்த்துப் பாடுவதிலும் துணைவியாரை மறக்கவில்லை, “உன்னைக் கைபிடித்ததனால் செம்மாந்து நிற்கின்றேன், நல்லவளே!” என வாழ்த்துகின்றார்.

பொருட்பால் பகுதியில் தீங்கு பிறர்க்கெண்ணாத் திறனும் விளையாட்டுந்தாம், தான் இன்னும், “ஆறோடு எழுபத் தகவையுடன் உள்ளேன்,” என்கின்றார். (தற்பொழுது எண்பத்து மூன்று).

எழுபத்தேழ் வயதில் நோய் பற்றுகிறது. எறும்பூரக் கல்லும் தேயும் பொழுது, எனக்கு மட்டும் தேய்வு வாராதா? அதுதானே இயற்கை!

**"வீதாம் விரைதரினும் வீழும் ஒருபொழுதில்!"**

(வீ = மலர், விரை = மணம்.) மலர் மணம் தந்தாலும் ஒரே நாளில் உதிர்ந்து விடுவதில்லையா? அதற்காகப் புலம்பி என்ன பயன்? என்கின்றார்.

நல்லதே நினைத்தல் வேண்டும்; நயம்பட உரைத்தல் வேண்டும்; சோர்வு தவிர்த்துச் சொல்வதை முடிக்க வேண்டும்; இல்லாதவர்க்கு ஈதல் வேண்டும்; இன்முகம் காட்ட வேண்டும் என்று தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றார். முற்றிய வீழ்தல் தேற்றம்; பற்றைப் பற்றி இடர்ப்படல் வேண்டா; அன்பில் ஆழ்க என்று முடிக்கின்றார். அந்த நேரத்திலும் சங்க நூல்களைப் போற்று, தமிழைப் போற்று என்று பாடுகின்றார். என்னே தமிழுணர்வு!

வெற்றுக்கு இறைவன் என்று வீணாகப் பணத்தையும் நேரத்தையும் செலவிடாதே; அந்தப் பணத்தை வறியவர்க்கு உதவு; உள்ளம் உயரும்; நீ உயர்வாய் என்கின்றார்.

*"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
**உள்ளத் தனையது உயர்வு!"** - குறள்: 595.

தமிழ்ப்பால் பகுதியில் நல்ல தமிழில் எழுது, குன்றா வளப்பம் நிறைந்த நூல்கள் தமிழ் மொழியில் இருந்தும் அவற்றை இளமையிலேயே கற்காமலிருப்பது இழிவு என்கின்றார். ஆழ்ந்து படி. குறைகூறுவதைத் தவிர். "வல்லார்க்கும் வாய்க்கும் வழிஇடறல்" என்கின்றார்.

**"அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு."** - குறள்: 503.

(ஆசு-குற்றம், வெளிறு -குறை)

**"தொல்லை தொடர்ந்திடுனும் தூயதமிழ் காத்துவருந்**
**தொல்காப் பியமே துணை."**

என்று பாடுவதிலிருந்து தொல்காப்பியத்தின் மீது இவருக்குள்ள பற்று வெள்ளிடை மலையென விளங்கும்.

படிப்பாரில்லாமல் எழுதுவதால் என்ன பயன்? என்று மனம் நொந்து கொள்கின்றார். என் செய்ய? அவர்களெல்லாம் இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் போலக் கெடுவார்கள் என்று கூறுகின்றார். (ஏமரா – பாதுகாப்பற்ற) (இனியேனும் படிப்பார் எண்ணிக்கை கூடட்டும்)

பிறபால் பகுதியில் இறையென இலாத கூறி ஏய்த்துப் பிழைக்கின்றவர்களே! பிறப்பில் பிரிவை வைப்போன் பெரியனா? இறைவனா? என வினவுகின்றார். கண் என்னும் பெண் நல்லாரைக் கணிகையர் என்றும் பெண்கள் கல்வி கற்றல் குற்றம் என்றும் கூறீனீர்களே, அதுதான் இறையா? விதைக்காது விளையும் கழனிகளே! செய்ந் நன்றி சிறுதும் உண்டா? வீழ்வது தமிழினந்தான் என்று மனம் வெதும்பிப் பாடுகின்றார்.

முதுபெருந் தமிழ்ப் புலவர் அரங்கநாதன் அவர்களைப்

**'புதுமலர்ப் பொலிவு கொண்ட**
**புன்னகை அரங்க நாத!'**

என்று குறிப்பிடுகின்றார்.

வாழ்வு நீர்க்குமிழி. எண்பத்திரண்டாண்டைக் கடந்தும் நெஞ்சில் நிறைவில்லை என்கின்றார்; என் செய்ய!

**"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு."** – குறள்: 336.

நிலையாமையைப் பெருமை என்கின்றார் திருவள்ளுவர். அதனால் புலவர் பொறிஞர் சி.செந்தமிழ்ச்சேய் அவர்கள்,

**"அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்."** – குறள்: 611.

என்ற திருக்குறளை நினைந்து மன அமைதி பெற்று வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்; பாராட்டுகின்றேன். வாய்ப்புக்கு நன்றி.

இந்நூல் ஒரு வாழ்க்கை விளக்கம். சிதறல் அன்று.

# அன்புரை:

**கோ. மன்றவாணன்.**
*வழக்குரைஞர்,*
*கடலூர்.*

பொறியியலையும் தமிழ் இயலையும் கற்றவர் புலவர், பொறிஞர் செந்தமிழ்ச்சேய்.

தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றில் ஈடுபாடு பெற்றவராக உள்ளார். இவர் கவிதை எழுதுகிற போது, யாப்பு இலக்கணம் தானாக வந்து உறவு கொள்கிறது. இவர் இலக்கணம் மீறாதவர். வாழ்வியலுக்குத் தேவையான அற இலக்கணத்தையும் மீறாதவர். இந்த நூலைப் படிக்கின்ற பொழுது, இவற்றை உணர்வீர்கள்.

எண்பத்து மூன்று அகவை; ஆனால் என்ன? முகநூலிலும் தன் முகம் காட்டி, அகம் காட்டிக் கவிதைகளை அள்ளித் தருகிறார். அந்த அந்த நாளில் எழும் எண்ணங்களை அப்படியே செய்யுள் வண்ணங்களாக மாற்றிப் படைத்து உள்ளார். அவற்றைத் தொகுத்து நூலாக்கித் தந்து உள்ளார்.

நூலின் தலைப்புத்தான் செய்யுள் சிதறல். இதில் உள்ள செய்யுள்கள் அத்தனையும் பன்மணித் திரள்.

இந்த நூல் என்னவோ சின்னதுதான். உள்ளே புகுந்தால் ஒரு பேருலகம் விரிவடைந்துகொண்டே போகிறது. இதற்கு எப்படி இரு பக்கங்களில் அணிந்துரை எழுத முடியும்?

இதில் உள்ள செய்யுள்களை வாய்விட்டுப் படித்துப் பாருங்கள். அவற்றில் கம்பனுக்கு ஈடான கவி ஓட்டமும் கவி நயமும் களிநடம் புரியும். வள்ளுவனை நினைவுறுத்தும் அறக்கருத்துக்களும் இருக்கும். இதை, இந்த நூலைப் படித்து முடித்த பிறகு நீங்களும் அறிந்து மகிழ்வீர்கள்.

முப்பால் என்றால் திருக்குறள்; ஐம்பால் என்றால் இந்தச் செய்யுள் சிதறல்தான். இன்பால், வாழ்த்துப்பால், பொருட்பால், தமிழ்ப்பால், பிறபால் என ஐந்து பால்களில் தன் பாடல்களைத் தாய்ப்பாலாகத் தந்து உள்ளார்.

வள்ளுவரோ அறத்துப்பாலை முதலில் வைத்தார். இன்பத்துப் பாலை இறுதியில் வைத்தார். இவரோ, இன்பத்துப் பாலை முதலில் வைத்தார். தமிழ்ப்பாலைக்கூட பின்தள்ளியே வைத்தார். தன் உயிரின் உயிராய் அமைந்த இல்லத்து அரசியை, எப்படி தன் உள்ளத்து அரசியாய் நேசிக்கிறார் என்பதற்கு இப்பாடல்கள் சான்றாகும். ஒரு காதல் காவியத்தைச் சிமிழுக்குள் வைத்தது போல், இந்த இன்பாலில் உள்ள செய்யுள்கள் உள்ளன.

பொருட்பால் வகையில் அமைந்த செய்யுள்களைக் கவனித்துப் பார்த்தேன். இவை, அகவை முதிர்வின் அதிர்வுகள்; ஆட்டம் போடும் யாவருக்கும் முன் எச்சரிக்கை செய்து வழி நடத்தும் பதிவுகள். இப்பாடல்கள், சித்தர் பாடல்களுக்கு இணையானவை; மறுக்க முடியாத உலக உண்மைகளும் ஆகும்.

சங்கப் புலவரின் மரபணு நம் செந்தமிழ்ச் சேயிடம் கலந்து இருக்கிறதோ என்று தோன்றுகிறது. காரணம், ஒவ்வொரு செய்யுளும் சங்கச் செய்யுள்போல் தரம் காட்டுகிறது. இந்தச் செய்யுள்களில் செந்தமிழும் மணக்கிறது. சிறந்த கருத்துக்களும் ஒளிர்கின்றன.

நூலில் உள்ள கவிதைகளை எடுத்துக்காட்டி நயம் சொல்வது என்றால், எல்லாக் கவிதைகளையும் சொல்ல வேண்டி இருக்கும். எதையும் விட முடியாது. விட்டால்... அந்தச் செய்யுள்கள் அணி திரண்டு வந்து என் கனவில் போர்க்கொடி உயர்த்தி நீதி கேட்கும்.

இந்த அன்புரை, ஓர் ஆற்றுப்படைதான். செந்தமிழ்ச் சேயிடம் சென்று பரிசுகளை வாங்கிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு செய்யுளும் உங்களுக்கு அவர் கொடுக்கும் பரிசு குவியல்தான்.

# இன்புரை:

**சீனி. சிவானந்தம்.**
வழக்குரைஞர்,
சென்னை.

**நற்றமிழ்ப் புலவர், நட்பிற் கினியர்;**
**வற்றாக் கவிதை வார்த்திடு பதிஞர்;**
**முற்றப் பழுத்த முக்கனி! மூப்பிலும்**
**கற்றுக் களிப்புறு காதலர்; இவரோ,**
**யாரினும் யாரினும் மிக்கார், எளியர்;**
**ஊரறி விளம்பர ஊட்டம் இல்லார்!**
**இயற்றமிழ் இனிக்கப் பாடும்**
**உயர்செந் தமிழ்ச்சேய் வாழ்க! வாழ்கவே!**

செய்யுட் சிதறலில் சேகரித்த முத்துக்கள்; மெய்யாலும் நன்முத்துக்களே! மெச்சும்படி சேர்க்கப் பட்டவை.

இவரின் எட்டுப் படைப்புக்களிலும் இடம் பெறாத கவிதைத் துளிகள், "செய்யுட் சிதறல்" எனச் சேர்க்கப்பட்டு ஒரு நூலாய் உலா வருகிறது. விரும்பிப் படித்தேன். விதவிதமான உள்ளடக்கம்!

கற்கவும் கற்பிக்கவும் ஆர்வமுடை எவரும் ஏற்கத் தக்க கருத்துக்கள் ஏராளம். தேனடையிலிருந்து வீழும் தேன் துளிகள் எனப் பாக்கள்! படிக்கப் படிக்க வாழையிலை விருந்துபோல் சுவை! சுவைஞனின பாராட்டு!

பொறிஞர், புலவர், பாவலர் ஒருவரின் சிந்தனையில் பிறந்த மகன் - பாறையில் பதிக்கப்பட்ட வீர மறவன் செம்பியன் தமிழவேள், பூக்காட்டில், பூம்பொழிலில், இன்பால் இனிதெனவே காதற் களிவெண்பா ஊக்கமுடன் பாடி, உயிரே உனக்காக என உலாவரும் கவிஞனின் எண்ணச் சிதறல் **"செய்யுட் சிதறல்!"** இனிப்பை ஏற்போம்; சுவைத்து மகிழ்வோம்.

# நூலின் உள்ளே :


| வ. எண் | தலைப்பு | பக்க எண் | பாடல்கள் |
|---|---|---|---|
| 1 | இன்பால் | 1 | 26 |
| 2 | வாழ்த்துப்பால் | 16 | 31 |
| 3 | பொருட்பால் | 27 | 40 |
| 4 | தமிழ்ப்பால் | 46 | 20 |
| 5 | பிற பால் | 52 | 16 |


## பாக்களும் பா வகைகளும் :

| பா வகை | பால் தொறும் பாக்கள்: | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | ஆக |
| நேரிசை வெண்பா | 7 | 3 | 23 | 12 | 7 | 52 |
| இன்னிசை வெண்பா | 2 | 8 | 1 | 1 | - | 12 |
| குறள் வெண்பா | - | 11 | 2 | 3 | 1 | 17 |
| பஃறொடை வெண்பா | - | 1 | - | - | - | 1 |
| அறுசீர் ஆசிரியவிருத்தம் | 14 | 5 | 14 | 1 | 6 | 40 |
| எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம் | - | 1 | - | - | - | 1 |
| கலி விருத்தம் | 3 | - | - | - | - | 3 |
| தரவு கொச்சகக் கலிப்பா | - | 2 | - | 3 | 1 | 6 |
| கொச்சகக் கலிப்பா | - | - | - | - | 1 | 1 |
| ஆகக் கூட்டு எண்ணிக்கை: | 26 | 31 | 40 | 20 | 16 | 133 |

# 1. இன்பால்.

## என்னவள்!

(கலி விருத்தம்)

**இளையாருள மெனவேபிற ழிடையாளெழி னடையால்**
**முளையாமலர்க் கொடியாமென முறியாதசை யுடலால்**
**களியானுறக் கனியாயினி கவினாளவட் கலப்பா**
**லுளையாவுயி ருடலோடுறை யுருவாயுல குளனே.**

(இளையார்உளம் எனவேபிறழ் இடையாள்எழில் நடையால்
முளையாமலர்க் கொடியாம்என முறியாதுஅசை உடலால்
களியான்உறக் கனியாய்இனி கவினாள்அவள் கலப்பால்
உளையாஉயிர் உடலோடுஉறை உருவாய்உலகு உளனே.)

1.

## நல்லவள்!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**வற்றிடு புலத்தைத் தேடி**
**மழைமுகில் பொழிவ தில்லை**
**யுற்றுயிர் மீட்டா [1]யுன்னி**
**னுய்பொரு ளுன்னி னில்லை**
**பெற்றவர்க் கிணையை யன்பில்**
**பெய்புல முவப்பி லின்பில்**
**நற்றிற மனைத்தும் பெற்ற**
**நல்லவள் நீயே யெல்லாம்.**

---

1. உன்னின்- எண்ணின், ஆராய்ந்தறியின்.

(வற்றிடு புலத்தைத் தேடி,
மழைமுகில் பொழிவ தில்லை.
உற்றுஉயிர் மீட்டாய்; உன்னின்,
உய்பொருள் உன்னின் இல்லை.
பெற்றவர்க்கு இணையை அன்பில்;
பெய்புலம் உவப்பில், இன்பில்!
நற்றிறம் அனைத்தும் பெற்ற
நல்லவள் நீயே எல்லாம்!) 2.

## எங்கே?

**குரலினி லினிமை கூட்டக்**
**குயிலினங் கற்ற தெங்கே**
**[1]யிரலையின் விழிகள் கொண்ட**
**பிறழ்வினை யேற்ற தெங்கே**
**யுரனமை விற்கும் வாட்கு**
**முற்றதும் கூர்மை யெங்கே**
**[2]நிரலரு வினிமை யுன்றன்**
**[3]நிழல்தமைப் பெற்ற யாவும்.**

(குரலினில் இனிமை கூட்டக்
குயிலினம் கற்றது எங்கே?
இரலையின் விழிகள் கொண்ட
பிறழ்வினை ஏற்றது எங்கே?
உரனமை விற்கும் வாட்கும்
உற்றதும் கூர்மை எங்கே?
நிரலரு இனிமை உன்றன்
நிழல்தமை பெற்ற யாவும்!) 3.

1. இரலை- மான். 2. நிரல் - ஒப்புமை. 3. நிழல் - சாயை, குளிர்ச்சி, ஒளி.

## அன்பின் வைப்பு!

**நாண்மலர் மென்மை தண்மை**
**நலமெலா மமைந்த பெண்மை**
**காண்டகு வழகிற் கெல்லாம்**
**காட்டென வமைந்த வுண்மை**
**வேண்டுநற் குணங்கள் யாரும்**
**விரும்பிடு பேச்சி லன்பு**
**தீண்டிடற் கில்லை யேனுந்**
**தேடரு வன்பின் வைப்பு.**

(நாள்மலர் மென்மை, தண்மை,
நலம்எலாம் அமைந்த பெண்மை!
காண்தகு அழகிற்கு எல்லாம்
காட்டென அமைந்த உண்மை!
வேண்டுநல் குணங்கள், யாரும்
விரும்பிடு பேச்சில் அன்பு!
தீண்டிடற்கு இல்லை ஏனும்
தேடுஅரு அன்பின் வைப்பு!) **4.**

## கவினுரு!

**தாமரைக் கண்ணார் [1]தாவில்**
**தண்மதி முகத்தார் தாழ்கீழ்**
**[2]தேமலர்க் குழலார் தீதில்**
**தேனினி யிதழார் திண்டேர்**
**காமுறு வுடலா ரன்னார்**
**கவினுரு காணி லீடா**
**யாமெனற் காகு மேலோ**
**ரரும்பொருள் காணற் காமோ.**

---

1. தாவில் = தா + இல்: குற்றம் இல்லாத. 2. தேமலர் = தேம் + மலர்; தேம் - இனிமை, தேன், மணம்.

(தாமரைக் கண்ணார்; தாஇல்
    தண்மதி முகத்தார்; தாழ்கீழ்
தேமலர்க் குழலார்; தீதுஇல்
    தேன்இனி இதழார்; திண்தேர்
காமுறு உடலார்; அன்னார்
    கவின்உரு காணில், ஈடாய்
ஆம்எனற்கு ஆகும் மேல்ஓர்
    அரும்பொருள் காணற் காமோ?) **5.**

**தேனிறை முல்லை சிந்தும்**
    **திரிவரி வண்டு மாந்தும்**
**கானுறை [1]நவ்வி கொண்ட**
    **காதலால் [2]கலையைச் சீந்தும்**
**பானிலாப் பகலாய்க் காயும்**
    **பனியெனத் தழுவும் தென்றல்**
**வேனிலா வில்லை தண்ணென்**
    **விடியலாம் வேட்கை நீளும்.**

(தேன்நிறை முல்லை சிந்தும்;
    திரிவரி வண்டு மாந்தும்!
கான்உறை நவ்வி கொண்ட
    காதலால் கலையைச் சீந்தும்!
பால்நிலாப் பகலாய்க் காயும்;
    பனியெனத் தழுவும் தென்றல்!
வேனிலா? இல்லை, தண்என்
    விடியலாம்; வேட்கை நீளும்.) **6.**

---

1. நவ்வி - பெண்மான். 2. கலை - ஆண்மான்.

## சின்னஞ் சிறுமடிப்பு!

(நேரிசை வெண்பா)

**சின்னஞ் சிறுமடிப்புன் சிற்றிடையில் சற்றசையப்**
**[1]பின்னம் பெறுநெஞ்சம் பேதைமைத்தே - பின்னுமிரு**
**வீங்கிள மென்மார்பம் வேட்கை மிகுவிக்க**
**வேங்கி யிளைத்திடலோ வென்.**

(சின்னஞ் சிறுமடிப்புஉன் சிறுஇடையில் சற்றுஅசையப்
பின்னம் பெறும்நெஞ்சம் பேதைமைத்தே! - பின்னும்இரு
வீங்குஇள மென்மார்பம் வேட்கை மிகுவிக்க
ஏங்கி இளைத்திடலோ? என்!) 7.

## பனிமொழி!

(கலி விருத்தம்)

**தண்டுறைத் தாமரைத் தளிரிதழ்த் தாளினள்**
**விண்டரு மின்னலின் வியப்புறு விடையினள்**
**மண்டரு மலரென மயக்குறு விழியினள்**
**பண்தரு விசைகெழு பனிமொழி யெழிலியே.**

(தண்துறைத் தாமரைத் தளிர்இதழ்த் தாளினள்
விண்தரு மின்னலின் வியப்புஉறு இடையினள்
மண்தரு மலரென மயக்குஉறு விழியினள்
பண்தரு இசைகெழு பனிமொழி எழிலியே.) **8.**

---

1. பின்னம் - சிதைவு, மாறுபாடு.

## உணர்வவள்!

**இருதலை எரிகழி இடையுறு எறும்பென**
**[1]வெருதுயர் உடன்றிட மிகநனி வருந்துவன்**
**ஒருசிறை[2] உயிரவள் மறுபுறம் உணர்வவள்**
**[3]தெருளிலை எனவுளை திரையலை மனநிலை.**

*(இருதலை எரிகழி இடைஉறு எறும்புஎன*
*வெருதுயர் உடன்றிட மிகநனி வருந்துவன்*
*ஒருசிறை உயிர்அவள் மறுபுறம் உணர்வுஅவள்*
*தெருள்இலை எனஉளை திரைஅலை மனநிலை.)* **9.**

## மாதர் காதல்?

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**மஞ்சுறழ் குழலார் மானேர்**
**மருள்விழி மாதர் காதல்**
**பஞ்சணை பொருட்டே யாயின்**
**பகனிலா வற்றே பண்பில்**
**மிஞ்சிடு வன்பில் மேன்மேல்**
**[4]மிடையுடை யரவு நாண**
**நஞ்சுறு காம வீர்ப்பால்**
**நண்ணலே லின்ப நாடா.**

*(மஞ்சுஉறழ் குழலார் மான்நேர்*
*மருள்விழி மாதர் காதல்*
*பஞ்சணை பொருட்டே ஆயின்,*
*பகல்நிலா அற்றே; பண்பில்!*
*மிஞ்சிடு அன்பில் மேன்மேல்*
*மிடைஉடை அரவு நாண*
*நஞ்சுஉறு காம ஈர்ப்பால்*
*நண்ணலேல், இன்பம் நாடா.)* **10.**

---

1. வெரு - அச்சம். 2. சிறை - பக்கம். 3. தெருள் - தெளிவு. 4. மிடை - நெருக்கம், பின்னப்பட்ட.

## ஆடையே அன்னார்!

கூடவே இருப்ப ரென்றுங்
குறுகுறு பார்வை யின்றும்
பாடவே றுபாடில் லாநற்
பழந்தமிழ்ச் சொல்லின் நீரா
ரூடவே தில்லென் றாலு
முறுத்திப்பின் னுவகை சேர்ப்ப
ராடையே வன்னா ரின்றேல்
யானடை பீடென் றேது.

(கூடவே இருப்பர் என்றும்;
குறுகுறு பார்வை இன்றும்!
பாடவே றுபாடுஇல் லாநற்
பழந்தமிழ்ச் சொல்லின் நீரார்!
ஊடஏது இல்என் றாலும்
உறுத்திப்பின் உவகை சேர்ப்பர்!
ஆடையே அன்னார் இன்றேல்,
யான்அடை பீடுஎன்று ஏது.) 11.

## விழுதுறை மரம்!

விழுபழ வகவை யின்றோ
வினையில னிளமைப் போதிற்
பழகலில் பேச்சில் காதல்
பார்வையோ டகன்று மன்பர்
விழுமிய துணையு மக்கள்
விரும்புநற் சுற்றம் பெற்றும்
விழுதுறை மரமே யென்ன
விளங்குவர் நெஞ்சி லென்னே.

(விழுபழ அகவை இன்றோ,
    வினைஇலன்! இளமைப் போதில்
பழகல்இல், பேச்சுஇல், காதல்
    பார்வையோடு அகன்றும் அன்பர்
விழுமிய துணையும் மக்கள்
    விரும்புநல் சுற்றம் பெற்றும்
விழுதுஉறை மரமே என்ன,
    விளங்குவர் நெஞ்சில் என்னே!) 12.

(நேரிசை வெண்பா)

**இன்றோ வவரின்றி யென்மனத்தி யாருமில்லை**
**நன்றோ நவைதானோ நானுணரேன் - குன்றேறிப்**
**பார்க்கு மிடமெல்லாம் பாவை யவருருவே**
**நீர்க்குமென் நெஞ்சு நெகிழ்ந்து.**

(இன்றோ அவர்இன்றி என்மனத்து யாரும்இல்லை!
நன்றோ? நவைதானோ? நான்உணரேன் - குன்றுஏறிப்
பார்க்கும் இடம்எல்லாம் பாவை அவர்உருவே!
நீர்க்கும்என் நெஞ்சு நெகிழ்ந்து.) 13.

## ஏற்றிப் போற்று:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**பணிநனி யெனினும் [1]போதைப்**
**பகிர்ந்துடன் கழிக்க மாத**
**ரணிமணி தம்மிற் கொண்டா**
**ரண்மையை யன்பை வேட்பர்**
**பிணைவிறு மமர்ந்து பேசில்**
**பெண்மையை யேற்றிப் போற்றில்**
**தணிவுறா தில்ல றந்தான்**
**தன்னல மிடையில் லாகின்.**

---

1. போதை - பொழுதை.

(பணிநனி எனினும் போதைப்
பகிர்ந்துஉடன் கழிக்க, மாதர்
அணிமணி தம்மின் கொண்டார்
அண்மையை, அன்பை வேட்பர்!
பிணைவுஇறும் அமர்ந்து பேசில்;
பெண்மையை ஏற்றிப் போற்றில்!
தணிவுஉறாது இல்ல நம்தான்,
தன்நலம் இடையில் ஆகின்.) 14.

## நூல் நயம்!

**கவலுதல் எதற்குக் கண்ணே**
**கலங்குவன் கலக்கங் கண்டால்**
**[1]தவலறு செய்யு ளொப்பாய்**
**தமிழ்தரு சுவையில் மிக்காய்**
**நவிறொறு நூன யம்போல்**
**நலன்மிக நாளு மீவா**
**யெவருனி னன்பின் மிக்கா**
**ரெனக்குயிர்த் துணையாந் தக்கார்.**

(கவலுதல் எதற்குக் கண்ணே?
கலங்குவன் கலக்கம் கண்டால்!
தவல்அறு செய்யுள் ஒப்பாய்;
தமிழ்தரு சுவையில் மிக்காய்!
நவில்தொறும் நூல்ந யம்போல்
நலன்மிக நாளும் ஈவாய்!
எவர்உனின்[2] அன்பின் மிக்கார்
எனக்குஉயிர்த் துணையாம் தக்கார்?) 15.

1. தவல் = குற்றம் இல்லாத. 2. உனின் - உன்னின்: இடைக்குறை.

## காதற் கூட்டு!

**உலகுறை யுயிர்கட் கெல்லா**
**முண்மையில் நாட்ட மின்பில்**
**நலமளி காதற் கூட்டே**
**[1]நவையளி யின்பஞ் சேர்க்கு**
**மிலையதற் கீடு மென்றா**
**லென்பொரு ளிருந்து மென்னாம்**
**கலனடி கசிதற் கண்டுங்**
**கடற்செல வாமோ காண்க.**

*(உலகுஉறை உயிர்கட்கு எல்லாம்*
*உண்மையில் நாட்டம் இன்பில்!*
*நலம்அளி காதல் கூட்டே,*
*நவைஅழி இன்பம் சேர்க்கும்!*
*இலைஅதற்கு ஈடும் என்றால்,*
*என்பொருள் இருந்தும் என்ஆம்?*
*கலன்அடி கசிதல் கண்டும்*
*கடல்செலவு ஆமோ? காண்க.)* **16.**

## நீ இலையேல்?

(நேரிசை வெண்பா)

**நீயிலையேல் நானில்லை நீயறிவாய் நேயனெனைத்**
**தீய பொருளமையத் திட்டலுமென் - தூயவணீ**
**யெட்டி யுதைத்தாலு மேசி யிகழ்ந்தாலு**
**மொட்டி யுறைவே னுவந்து.**

*(நீஇலையேல் நான்இல்லை, நீஅறிவாய்; நேயன்எனைத்*
*தீய பொருள்அமையத் திட்டலும்என்? - தூயவள்நீ*
*எட்டி உதைத்தாலும் ஏசி இகழ்ந்தாலும்*
*ஒட்டி உறைவேன் உவந்து.)* **17.**

1. நவை - குற்றம்.

## நகைத்திடு நமன்!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**தாமரை மலரென் பேனா**
**தண்ணிழல் நிலவென் பேனா**
**[1]நாமளி வேலென் பேனா**
**நளிர்கடல் சேலென் பேனா**
**[2]மீமிகு குன்றென் பேனா**
**மென்மலர்ச் செண்டென் பேனா**
**[3]காமமுந் துள்ள மின்றோ**
**கலங்கிடுங் கவினால் நன்றோ.**

(தாமரை மலர்என் பேனா?
தண்நிழல் நிலவுஎன் பேனா?
நாம்ஆளி வேல்என் பேனா?
நளிர்கடல் சேல்என் பேனா?
மீமிகு குன்றுஎன் பேனா?
மென்மலர்ச் செண்டுஎன் பேனா?
காமம்முந்து உள்ளம் இன்றோ,
கலங்கிடும் கவினால்; நன்றோ?) **18.**

**மலரக விதழென் பேனா**
**மயற்றரு மதுவென் பேனா**
**நிலநிறை திருவென் பேனா**
**நீணடை [4]நிழலென் பேனா**
**இலமெனுஞ் சொற்கு நேரா**
**மிடையெனும் பொருள்கொள் வேனா**
**நலமெலா நிறைந்தென் னெஞ்சுள்**
**நகைத்திடு நமனென் பேனா.**

---

1. நாம் = அச்சம் அளிக்கும். 2. மீமிகு - மேலும் மிகுந்த. 3. காமமுந்து = காமம் + முந்து; காமம் + உந்து. 4. நிழல் - ஒளி

(மலர்அக இதழ்என் பேனா?
மயல்தரு மதுஎன் பேனா?
நிலம்நிறை திருஎன் பேனா?
நீள்நடை நிழல்என் பேனா?
இலம்எனும் சொற்கு நேர்ஆம்
இடைஎனும் பொருள்கொள் வேனா?
நலம்எலாம் நிறைந்துஎன் நெஞ்சுள்
நகைத்திடு நமன்என் பேனா?) 19.

## தோல்வி கண்ட காதல்.

(நேரிசை வெண்பா)

**கொஞ்சி யுடன்குலவிக் கூடமணங் கூடவில்லை**
**நெஞ்சில் நெருடலிலை நீகவலேல் - செஞ்சொலிள**
**வஞ்சியுன் மாமனுடன் வாழ்நாளு மாட்சியுட**
**னெஞ்ஞான்றும் வாழ்க வினித்து.**

(கொஞ்சி உடன்குலவிக் கூடமணம் கூடஇல்லை!
நெஞ்சில் நெருடல்இலை; நீகவலேல்! - செம்சொல்இள
வஞ்சி!உன் மாமன்உடன் வாழ்நாளும் மாட்சிஉடன்
எஞ்ஞான்றும் வாழ்க இனித்து!) 20.

**நஞ்சா யுறவமையா நையற்க நாளுமெணி**[1]
**யெஞ்சா மகிழ்வெய்து மில்சிறக்கு - மஞ்சேல்நீ**
**தஞ்சமென மாமனுன் தாள்கிடப்பான் காலமெலா**
**நெஞ்சினிக்க வில்லறத்தில் நில்.**

(நஞ்சாய் உறவுஅமையா, நையற்க நாளும்எணி!
எஞ்சா மகிழ்வுஎய்தும், இல்சிறக்கும்! - அஞ்சேல்நீ!
தஞ்சம்என மாமன்உன் தாள்கிடப்பான் காலம்எலாம்;
நெஞ்சுஇனிக்க இல்அறத்தில் நில்.) 21.

1. எணி - எண்ணி :- இடைக்குறை.

## நோதல் என்?

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**[1]ஏக்கற்றுன் னடிக்கீழ் வீழ்ந்து**
**மிரங்கலி லிமைத்தும் பாராய்**
**போக்கற்றுன் மனத்தை வேட்டுப்**
**புலம்புவன் புரிந்தும் போற்றாய்**
**தாக்குவ விழியும் மார்புந்**
**தடுத்திடா [2]யிறையு நேர்பா**
**நோக்கெனை யெரிக்குந் தீய்க்கு**
**நோதலென் நுவல்க கண்ணே.**

(ஏக்கற்றுஉன் அடிக்கீழ் வீழ்ந்தும்
இரங்கல்இல்; இமைத்தும் பாராய்!
போக்குஅற்றுஉன் மனத்தை வேட்டுப்
புலம்புவன்; புரிந்தும் போற்றாய்!
தாக்குவ விழியும் மார்பும்;
தடுத்திடாய் இறையும்; நேர்பா?
நோக்குஎனை எரிக்கும்; தீய்க்கும்!
நோதல்என்? நுவல்க, கண்ணே!) 22.

## நிற்பார் கண்முன்!

(இன்னிசை வெண்பா)

**இட்டவடி நோக வெடுத்தவடி யின்னலுறத்**
**தட்டுத் தடுமாறித் தாட்டளர்ந் தூர்கையிலே**
**கொட்டிக் கிழங்கோ கிழங்கென்று கூறிச்செல்**
**மொட்டனார் நிற்பார்கண் முன்.**

---

1. ஏக்கற்று - ஆசையால் தாழ்ந்து. 2. இறை - அற்பம், சிற்றளவு.

(இட்டஅடி நோக எடுத்தஅடி இன்னல்உறத்
தட்டுத் தடுமாறித் தாள்தளர்ந்து ஊர்கையிலே
கொட்டிக் கிழங்கோ கிழங்குஎன்று கூறிச்செல்
மொட்டுஅனார் நிற்பார்கண் முன்.) 23.

## விழிநோக்கே கூற்று!

(நேரிசை வெண்பா)

**பகலிரவு பாராமல் பாவையவ ணோக்கே**
**யகலாதுண் ணின்றலைத் தாட்டு - [1]நகுமுகமோ**
**முல்லை [2]முகிழ்சிரிப்போ [3]மொய்குழலோ முன்னில்லா**
**கொல்வேல் விழிநோக்கே கூற்று.**

(பகல்இரவு பாராமல் பாவைஅவள் நோக்கே,
அகலாதுஉள் நின்றுஅலைத்து ஆட்டும்! - நகுமுகமோ,
முல்லை முகிழ்சிரிப்போ, மொய்குழலோ, முன்நில்லா;
கொல்வேல் விழிநோக்கே, கூற்று.) 24.

## கூடலிலென்?

**விண்ணில் விழைந்தேறி வெண்ணிலவில் வீற்றிருக்க**
**வெண்ணி யினித்திருந்தே னென்னுயிரை - யுண்ணவட்டன்**
**னுள்ள வுயர்மலரி னோர மொதுக்கிமணங்**
**கொள்ளற்குங் கூடலில்லென் கொல்.**

(விண்ணில் விழைந்துஏறி வெள்நிலவில் வீற்றுஇருக்க
எண்ணி இனித்துஇருந்தேன்; என்உயிரை - உண்அவள்தன்
உள்ள உயர்மலரின் ஓரம் ஒதுக்கிமணம்
கொள்ளற்கும் கூடல்இல்என் கொல். 25.

1. நகு - ஒளிர், மலர், மகிழ். 2. முகிழ் - அரும்பு. 3. மொய் - நெருக்கிய, அழகு.

# மேல் எவரும் இல்!

(இன்னிசை வெண்பா)

**இல்லா ளுடனிருப்ப வில்லாத வேதுமிலை**
**நல்லா ரவராயின் நாளு நலிவணுகா**
**பொல்லா ரெனினும் [1]புரைதீர் புகழ்பெறற்**
**கில்லாளின் மேலெவரு மில்.**

(இல்லாள் உடன்இருப்ப இல்லாத ஏதும்இலை
நல்லார் அவர்ஆயின் நாளும் நலிவுஅணுகா
பொல்லார் எனினும் புரைதீர் புகழ்பெறற்கு
இல்லாளின் மேல்எவரும் இல்.) **26.**

1. புரை - குற்றம்.

# 2. வாழ்த்துப்பால்

## பொங்கல் வாழ்த்து:

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

நீரின்றி யமையாவிவ் வுலக வாழ்வு
    நிறையுணவு குறையுறுமேல் நிலையா வாழ்வு
மேரெருதோ டெந்திரமில் லுணவு மில்லை
    யெந்தமிழ ருணர்ந்திருந்தார் நன்றி காட்டச்
சீரொன்று பொங்கலெனச் சேர்ந்து கூடிச்
    செய்விழவின் மிக்கதொரு சிறப்பு முண்டோ
ஊரொன்றிப் பொங்கலிட் டுவக்கு நாளி
    லுயரெண்ணம் பொங்கட்டு முயர்க வாழ்க.

(நீர்இன்றி அமையாஇவ் உலக வாழ்வு!
    நிறைஉணவு குறைஉறுமேல், நிலையா வாழ்வும்.
ஏர்எருதோடு எந்திரம்இல், உணவும் இல்லை!
    எந்தமிழர் உணர்ந்திருந்தார்; நன்றி காட்டச்
சீர்ஒன்று பொங்கல்எனச் சேர்ந்து கூடிச்
    செய்விழவின் மிக்கதுஒரு சிறப்பும் உண்டோ!
ஊர்ஒன்றிப் பொங்கலிட்டு உவக்கும் நாளில்,
    உயர்எண்ணம் பொங்கட்டும்; உயர்க! வாழ்க!)

1.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**பொங்கலோ பொங்க லென்று**
**பொங்கட்டு மகிழ்ச்சி யென்று**
**மெங்குளர் யாரென் றின்றி**
**யாவரு மினிது வாழ்க**
**நங்குலஞ் சமய மெண்ணா**
**நல்லரா யன்பி லாழ்க**
**செங்கதி ரொளியாய்ச் சேர்ந்து**
**செம்மையாய் வளர்க்க வாழ்க.**

(பொங்கலோ பொங்கல் என்று,
பொங்கட்டும் மகிழ்ச்சி என்றும்!
எங்குஉளர் யார்என்று இன்றி,
யாவரும் இனிது வாழ்க!
நம்குலம் சமயம் எண்ணா
நல்லராய் அன்பில் ஆழ்க!
செம்கதிர் ஒளியாய்ச் சேர்ந்து
செம்மையாய் வளர்க்க! வாழ்க!) **2.**

## பெயரன் பிறந்தநாள் வாழ்த்து.

(இன்னிசை வெண்பா)

**நல்லொழுக்கங் கல்வி நகையுணர்வு நன்னோக்க**
**மெல்லா மியைந்த வினியவெம் பேர**
**பிறந்தவிந் நன்னாளில் பேறுபல சேரச்**
**சிறந்திடுக நாளுஞ் செழித்து.**

(நல்ஒழுக்கம், கல்வி, நகைஉணர்வு, நல்நோக்கம்
எல்லாம் இயைந்த இனியஎம் பேர!
பிறந்தஇந் நல்நாளில் பேறுபல சேரச்
சிறந்திடுக நாளும் செழித்து.) **3.**

***அகவையிரு பத்துமொன்று மாகுமுனங் கல்வி***
***மிகுநிறை வாய்க்கொண்டு மிக்கோனாய்த் தக்கபணி***
***யுற்றா லுவகை யுறாவுள முண்டாமோ***
***பெற்றோம் பெயரனால் பீடு.***

(அகவைஇரு பத்தும்ஒன்றும் ஆகும்முனம் கல்வி
மிகுநிறை வாய்க்கொண்டு மிக்கோனாய்த் தக்கபணி
உற்றால் உவகை உறாவுளம் உண்டாமோ?
பெற்றோம் பெயரனால் பீடு.) **4.**

## நண்பர் மணநாள் வாழ்த்து!

(நேரிசை வெண்பா)

***ஐம்பதாண் டில்வாழ்வி லைம்புலனி லாழ்ந்தாண்டு***
***செம்மையுற வாழ்ந்து சிறந்திட்டீ - ரிம்மையினுஞ்***
***சூல்கொண்ட மேகமெனச் சூழ்ந்தவர்தாம் வாழ்த்துரைக்க***
***வால்போ லுயர்க வணைந்து!***

(ஐம்பதாண்டு இல்வாழ்வில் ஐம்புலனில் ஆழ்ந்தாண்டு
செம்மைஉற வாழ்ந்து சிறந்திட்டீர்! - இம்மைஇனும்
சூல்கொண்ட மேகமெனச் சூழ்ந்தவர்தாம் வாழ்த்துரைக்க
ஆல்போல் உயர்க அணைந்து!) 5.

**இன்பமோ துன்பமோ வெல்லா மியல்பென**
**நன்மையே நாடு [1]நடுக்கலிலீர் - மன்னு**
**நிறைவோடு நீடிருந்து நேரார்க்கு மன்போ**
**டிருந்தோம்பி வாழ்க வியைந்து!**

(இன்பமோ? துன்பமோ? எல்லாம் இயல்புஎன,
நன்மையே நாடும் நடுக்கல்இலீர்! - மன்னும்
நிறைவோடு நீடுஇருந்து, நேரார்க்கும் அன்போடு
இருந்துஓம்பி வாழ்க இயைந்து!) 6.

## எண்பதில் இன்று யான்!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**எண்பதாம் பிறந்த நாளை**
**யெய்தினேன் மகிழ்ச்சி தானா**
**உண்ணிறை யமைதி யாமா**
**முளம்மிகு மகிழ்ச்சி யுண்மை**
**கண்ணென மனைவி மக்கள்**
**கருதுவர் களிப்பே காணிற்**
**பண்புடைச் சுற்றம் நட்பும்**
**பகையிலை யினிதே யிந்நாள்.**

(எண்பதாம் பிறந்த நாளை
எய்தினேன்; மகிழ்ச்சி தானா?
உள்நிறை அமைதி; ஆமாம்,
உளம்மிகு மகிழ்ச்சி; உண்மை!
கண்என மனைவி, மக்கள்
கருதுவர்; களிப்பே! காணின்,
பண்புஉடைச் சுற்றம், நட்பும்!
பகைஇலை; இனிதே இந்நாள்!) 7.

1. நடுக்கலிலீர் = நடுக்கல் + இலீர். இலீர் = இல்லீர் - இடைக்குறை.

(இன்னிசை வெண்பா)

**எண்பதிற் கால்பதித் தின்று தவழ்ந்திடுவே**
**னெண்ணத்திற் சேய்தா னெவர்க்கு மிடரில்லா**
**வண்ணமினும் வாழ்நாளில் வாழ்வைக் கழித்திடற்கே**
**யெண்ண மியையி னினிது.**

(எண்பதில் கால்பதித்து இன்று தவழ்ந்திடுவேன்!
எண்ணத்தில் சேய்தான்; எவர்க்கும் இடர்இல்லா
வண்ணம்இனும் வாழ்நாளில் வாழ்வைக் கழித்திடற்கே,
எண்ணம்; இயையின், இனிது!) **8.**

**பற்றற் றிருக்கப் பழகினுமென் பாழ்மனத்**
**துற்ற வுயிராசை யுள்ளு ளொளிந்துளதே**
**யெற்றுக் கினுமிருக்க வேங்கி யிளைத்திருத்தல்**
**நிற்றலிலை யாரு நிலைத்து.**

(பற்றுஅற்று இருக்கப் பழகினும்என்? பாழ்மனத்து
உற்ற உயிர்ஆசை உள்உள் ஒளிந்துஉளதே!
எற்றுக்கு இனும்இருக்க ஏங்கி இளைத்துஇருத்தல்?
நிற்றல்இலை யாரும் நிலைத்து.) **9.**

**நல்லாரே எல்லாரு நம்நினைப்பு நன்றானா**
**லெல்லாரு மெல்லாமு மேற்ப வினிதெய்தின்**
**பொல்லாரு மிங்கே பொருந்துவரோ போற்றிடுக**
**கல்லாமை யில்லாமை காண்.**

(நல்லாரே எல்லாரும் நம்நினைப்பும் நன்றுஆனால்!
எல்லாரும் எல்லாமும் ஏற்ப இனிதுஎய்தின்,
பொல்லாரும் இங்கே பொருந்துவரோ? போற்றிடுக!
கல்லாமை, இல்லாமை காண்.) **10.**

**பிறந்தா ரிறப்பர் பிறழ்தலிலை யுண்மை**
**யிறந்தார் பிறப்பா ரெனற்குறுதி யில்லை**
**யறத்து வழியாற்றி யன்பெவர்க்கு நல்கிச்**
**சிறத்தல் பிறத்தலின் சீர்.**

*(பிறந்தார் இறப்பர்; பிறழ்தல்இலை உண்மை!*
*இறந்தார் பிறப்பர் எனற்குஉறுதி இல்லை.*
*அறத்து வழிஆற்றி, அன்புஎவர்க்கும் நல்கிச்*
*சிறத்தல் பிறத்தலின் சீர்!)* **11.**

## பிறந்தநாள் வாழ்த்துப் பாக்கள்:

(குறள் வெண்பா)

**எல்லாரு மெல்லாமு மெய்த வினிதாற்றி**
**நல்லாராய் வாழ்க நயந்து.**

*(எல்லாரும் எல்லாமும் எய்த இனிதுஆற்றி*
*நல்லாராய் வாழ்க நயந்து.)* **12.**

**பல்லோர் புகழ்ந்தேற்றப் பண்பு நலன்பெற்று**
**வல்லோராய் வாழ்க வளர்ந்து.**

*(பல்லோர் புகழ்ந்துஏற்றப் பண்பு நலன்பெற்று*
*வல்லோராய் வாழ்க வளர்ந்து.)* **13.**

**இல்லை பொருளெனினு மேற்ப வினிதுதவி**
**நல்லோராய் வாழ்ந்திடுக நன்று.**

*(இல்லை பொருள்எனினும் ஏற்ப இனிதுஉதவி*
*நல்லோராய் வாழ்ந்திடுக நன்று.)* **14.**

***எல்லார்க்கு நல்லரா யில்லார்க்கு மின்றுணையா***
***[1]யொல்லார்க்கு மூற்றா யுயர்.***

*(எல்லார்க்கும் நல்லராய், இல்லார்க்கும் இன்றுணையாய்,*
*ஒல்லார்க்கும் ஊற்றாய் உயர்.)* **15.**

***பிறந்தநாட் கொண்டாடும் பேறுடையீர் பேறா***
***நிறைவோடு வாழ்க நெடிது.***

*(பிறந்தநாள் கொண்டாடும் பேறுஉடையீர் பேறாம்*
*நிறைவோடு வாழ்க நெடிது.)* **16.**

***இன்றுபோ லென்று மினியரா யெல்லார்க்கு***
***நன்றாற்றி வாழ்தல் நலம்.***

*(இன்றுபோல் என்றும் இனியராய், எல்லார்க்கும்*
*நன்றுஆற்றி வாழ்தல் நலம்.)* 17.

***பிறந்தவிந் நன்னாளில் பேறுமிகப் பெற்றுச்***
***சிறந்திடுக நீடு செழித்து.***

*(பிறந்தஇந் நல்நாளில் பேறுமிகப் பெற்றுச்*
*சிறந்திடுக நீடு செழித்து.)* 18.

***[2]இன்னா ளிதுபோல வென்று மினிதுறைந்து***
***பன்னூறு வாழ்க பகிர்ந்து.***

*(இன்நாள் இதுபோல என்றும் இனிதுஉறைந்து*
*பல்நூறு வாழ்க பகிர்ந்து.)* 19.

---

1. ஒல்லார் - வேண்டார், பகைவர். 2. இன் - இனிய.

**வேண்டிய வேண்டியாங் கெய்தி [1]விழுப்பமுடன்**
**யாண்டுபல வாழ்க வினிது.**

(வேண்டிய வேண்டியாங்கு எய்தி விழுப்பமுடன்
யாண்டுபல வாழ்க இனிது.) 20.

**[2]வரையில் வளங்கள் [3]புரையில் நலன்கள்**
**[4]நிரைந்திட வாழ்க நெடிது.**

(வரைஇல் வளங்கள், புரைஇல் நலன்கள்
நிரைந்திட வாழ்க நெடிது.) 21.

## நிறைவாக வாழ்க நெடிது!

(பஃறொடை வெண்பா)

**தாத்தா வெனுந்தகுதி தந்த முதற்பெயரன்**
**[5]போத்தாய் வளர்ந்து பொலிகின்றா - ரேத்தாரார்**
**பத்திரண் டாண்டிற் பணிவு பரிவுமுட**
**னொத்த வுணர்ந்தாரா யுண்ணுழைவார் - மெத்த**
**பிறந்தவிந் நன்னாளிற் பேறுபல பெற்று**
**நிறைவாக வாழ்க நெடிது.**

(தாத்தா எனும்தகுதி தந்த முதல்பெயரன்
போத்தாய் வளர்ந்து பொலிகின்றார்! - ஏத்தார்ஆர்?
பத்திரண்டு ஆண்டில் பணிவு, பரிவும்உடன்
ஒத்த உணர்ந்தாராய் உள்நுழைவார் - மெத்த!
பிறந்தஇந் நல்நாளில் பேறுபல பெற்று,
நிறைவாக வாழ்க நெடிது. 22.

1. விழுப்பம் - விழுமம், மேன்மை. 2. வரை - அளவு, எல்லை. 3. புரை - குற்றம். 4. நிரை - நிரம்புதல், திரள்தல். 5. போத்து - புதுக்கிளை..

## பள்ளி போம் பெயர்த்தி!

(இன்னிசை வெண்பா)

**நான்கு முடியாதார் நற்பேறா மெம்பெயர்த்தி**
**தேன்சிந்தும் பூமுகத்தர் தென்றலெனத் தான்படிக்க**
**வெட்டுமணிக் கெல்லா மிதழ்சிரிக்கச் செல்லுமெழில்**
**விட்டகலா நெஞ்சகத்தை விட்டு.**

(நான்கும் முடியாதார் நல்பேறாம் எம்பெயர்த்தி
தேன்சிந்தும் பூமுகத்தர் தென்றல்எனத் தான்படிக்க
எட்டுமணிக்கு எல்லாம் இதழ்சிரிக்கச் செல்லும்எழில்
விட்டுஅகலா நெஞ்சஅகத்தை விட்டு.) 23.

(குறள் வெண்பா)

**இன்றென் பெயர்த்தி யெழிலாட்டங் காண்கண்க**
**ளென்னோற்ற கொல்லோ வினிது.**

(இன்றுஎன் பெயர்த்தி எழில்ஆட்டம் காண்கண்கள்,
என்நோற்ற கொல்லோ? இனிது!) 24.

## பெயர்த்தி வாழ்த்து!

(நேரிசை வெண்பா)

**நான்ககவை நீங்க நடைபயில்வா யின்றைந்தில்**
**வான்மதி யன்ன வடிவமைந்தாய் - மாண்சீ**
**ரொழுக்கமுடன் கல்வி யுயர்ந்தோங்க வொன்றும்**
**விழுப்பமெலாம் கொள்க விழைந்து.**

(நான்குஅகவை நீங்க, நடைபயில்வாய் இன்றுஐந்தில்!
வான்மதி அன்ன வடிவுஅமைந்தாய்! - மாண்சீர்
ஒழுக்கம்உடன் கல்வி உயர்ந்துஓங்க, ஒன்றும்
விழுப்பம்எலாம்! கொள்க, விழைந்து.) 25.

## பேராசிரியர் இரா.செல்வகணபதியார்தம் சைவ சமயக் களஞ்சியத்திற்கு அளித்த வாழ்த்துச் செய்யுட்கள்:

(தரவு கொச்சகக் கலிப்பா)

**பெருங்கடலைச் சிறுகலயத் தடைத்தவொரு குறுமுனிவ**
**ரருஞ்செயலைப் பெரிதெனவே யறைவரிவ ணமைவததோ**
**[1]விருஞால வெளியினினு மிடம்படர்ந்த சிவசமய**
**வருள்யாவுந் தெரியவரத் தருமுயற்சி பெரிதன்றோ.**

(பெருங்கடலைச் சிறுகலயத்து அடைத்தஒரு குறுமுனிவர்
அரும்செயலைப் பெரிதுஎனவே அறைவர்இவண்! அமைவதுஅதோ?
இருஞால வெளியினினும் இடம்படர்ந்த சிவசமய
அருள்யாவும் தெரியவரத் தருமுயற்சி பெரிதுஅன்றோ.) 26.

**செந்தமிழை நாவினிக்கச் செவியுணர்வோர் தாஞ்சுவைக்கத்**
**தந்தவொரு பிள்ளையென வந்ததிரு கணபதியார்**
**சிந்தனையின் செயற்பாடாஞ் சிவசமயக் களஞ்சியங்க**
**ளிந்தவுயர் பிறவியிடை யிவர்பெருமை நிலைபெறுமே.**

(செம்தமிழை நாஇனிக்கச் செவிஉணர்வோர் தாம்சுவைக்கத்
தந்தஒரு பிள்ளைஎன வந்ததிரு கணபதியார்
சிந்தனையின் செயல்பாடாம் சிவசமயக் களஞ்சியங்கள்!
இந்தஉயர் பிறவிஇடை இவர்பெருமை நிலைபெறுமே!) 27.

---

1. இருஞாலம் - பெரிய உலகம்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**சொத்துப்பற் றெதுவுங் கூடத்**
**தொடர்ந்திடா சூழ வாரா**
**பித்தராய் வாழ்வோம் போவோம்**
**பெற்றதென் னிப்பி றப்பில்**
**வித்தகர் தனித்துக் கண்ட**
**களஞ்சியம் வீழ்நாள் வாழு**
**மித்தரை யிருக்கு நாளு**
**மிவர்புகழ் பரப்பு மேலும்.**

(சொத்துப்பற்று எதுவும் கூடத்
தொடர்ந்திடா; சூழ வாரா.
பித்தராய் வாழ்வோம், போவோம்;
பெற்றதுஎன் இப்பி றப்பில்?
வித்தகர் தனித்துக் கண்ட
களஞ்சியம், வீழ்நாள் வாழும்!
இத்தரை இருக்கும் நாளும்
இவர்புகழ் பரப்பும் மேலும்.) 28.

**இலையிறை யென்பார் கூட**
**வினியரும் மியல்பை யேற்பர்**
**நிலையினிற் றாழ்த லில்லா**
**நிற்பணிச் சிறப்பைக் காண்பர்**
**தலைமுறை சிறந்து சைவத்**
**தமிழ்நெறி போற்றி ஓங்கு**
**மலையெனச் சைவம் நீள**
**நிலைத்திடும் நீடு வாழ்க!**

(இலைஇறை என்பார் கூட
இனியர்உம் இயல்பை ஏற்பர்!
நிலையினில் தாழ்தல் இல்லா
நின்பணிச் சிறப்பைக் காண்பர்!
தலைமுறை சிறந்து சைவத்
தமிழ்நெறி போற்றி ஓங்கும்!
மலையெனச் சைவம் நீள
நிலைத்திடும்; நீடு வாழ்க!) 29.

## நல்லவளே!

(நேரிசை வெண்பா)

**முன்னோர் துணையென்று மூத்தோர் மொழிக்கிசைந்து**
**நன்னாளில் கைபிடித்தேன் நல்லவளே - அன்போடிங்**
**கைம்பத் திரண்டாண் டகலா தருகிருப்பச்**
**செம்மாந்து நிற்பேன் செழித்து.**

(முன்னோர் துணைஎன்று மூத்தோர் மொழிக்குஇசைந்து,
நல்நாளில் கைபிடித்தேன்; நல்லவளே! - அன்போடுஇங்கு
ஐம்பத்து இரண்டுஆண்டு அகலாது அருகிருப்பச்
செம்மாந்து நிற்பேன் செழித்து.) 30.

## வளர்க! வாழ்க!

**கரைபொரு வலைக ளொப்பக்**
**கவலைகள் வருவ போவ**
**நரைதிரை மூப்பு நோய்கள்**
**நாடுவ வாழ்நாள் ஈற்றில்**
**வரையுறை வாழ்வா வென்றும்**
**வாட்டமில் நிறைவு தானே**
**புரையிலா வன்ப மேன்மேல்**
**பொலிவுடன் வளர்க வாழ்க.**

(கரைபொரு அலைகள் ஒப்பக்
    கவலைகள் வருவ, போவ.
நரைதிரை மூப்பு நோய்கள்
    நாடுவ வாழ்நாள் ஈற்றில்.
வரையுறை வாழ்வா? என்றும்
    வாட்டமில் நிறைவு தானே!
புரையிலா அன்ப, மேன்மேல்
    பொலிவுடன் வளர்க, வாழ்க.) 31.

# 3. பொருட்பால்

## கூடக் கூடா!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**ஆண்டொன்று போயின் வாழு**
**மகவையி ரொன்று தேயு**
**மீண்டதை யெண்ணி நாளு**
**மினியன மேவின் நீளும்**
**கூண்டலை மூச்சு மாயிற்**
**கொண்டவை கூடக் கூடா**
**வாண்டெதிர் யார்க்கும் நல்ல**
**வாற்றுக போற்ற வாழ்க.**

(ஆண்டுஒன்று போயின், வாழும்
அகவையில் ஒன்று தேயும்.
ஈண்டுஅதை எண்ணி நாளும்
இனியன மேவின், நீளும்.
கூண்டுஅலை மூச்சு மாயின்,
கொண்டவை கூடக் கூடா.
ஆண்டுஎதிர் யார்க்கும் நல்ல
ஆற்றுக; போற்ற வாழ்க.) 1.

## ஒழிக காதல்!

காதலே பெரிதென் றெண்ணிக்
கவலலென் னொழிக காதல்
வேதனைக் கான வித்து
விட்டிடின் வீழ்த்தும் வீட்டை
யீதலே சிறந்த தென்று
மிணையதற் கில்லை யின்றும்
காதலே யீத லாகக்
கருதுக காலம் சொல்லும்.

(காதலே பெரிதென்று எண்ணிக்
கவலல் என்? ஒழிக! காதல்,
வேதனைக்கு ஆன வித்து;
விட்டிடின் வீழ்த்தும் வீட்டை!
ஈதலே சிறந்தது என்றும்;
இணைஅதற்கு இல்லை இன்றும்!
காதலே ஈதல் ஆகக்
கருதுக; காலம் சொல்லும்!) 2.

## பற்றுத் தீரா!

இத்தனை யகவை சென்று
மெரித்திடு மாசை யின்றும்
பித்தெனப் பிறழு மெண்ணம்
பேதைமை யறிவைத் தின்னும்
செத்திடற் றிண்ண மென்று
தெரிந்துமென் பற்றுத் தீரா
சொத்தெனத் தொடர்தற் குண்டா
துயரலால் மகிழ்ச்சி உண்டா.

(இத்தனை அகவை சென்றும்
எரித்திடும் ஆசை இன்றும்!
பித்துஎனப் பிறழும் எண்ணம்;
பேதைமை அறிவைத் தின்னும்!
செத்திடல் திண்ணம் என்று,
தெரிந்தும்என்? பற்றுத் தீரா!
சொத்துஎனத் தொடர்தற்கு உண்டா?
துயர்அலால், மகிழ்ச்சி உண்டா?) 3.

## பற்றும் பற்றாய்!

**பற்றற் றிருக்கப் பார்க்கின்றேன்**
**பற்றும் பற்றாய்ப் படிந்திடுமே**
**கற்றற் குரிய கற்றறிந்துங்**
**காம மின்றுஞ் [1]செறுத்திடுமே**
**பெற்ற வுறவோர் சுற்றமெலாம்**
**பின்னாள் சின்னாள் மறந்திடுவார்**
**உற்றிங் குயிரோ டுறைபொழுதே**
**யுதவி யுறவா யுவப்போமே.**

(பற்றற்று இருக்கப் பார்க்கின்றேன்;
பற்றும் பற்றாய்ப் படிந்திடுமே!
கற்றற்கு உரிய கற்றறிந்தும்
காமம் இன்றும் செறுத்திடுமே!
பெற்ற உறவோர் சுற்றமெலாம்
பின்னாள் சின்னாள் மறந்திடுவார்;
உற்றிங்கு உயிரோடு உறைபொழுதே,
உதவி, உறவாய் உவப்போமே!) 4.

1. செறுத்தல் - வருத்தல், கொல்லல்.

(நேரிசை வெண்பா).

**பற்றற் றிருக்கப் பழகலின்றிப் பன்னாளுங்**
**குற்ற மிழைக்குங் குறையெதற்காம் - வெற்றுப்**
**பிடிநீறாம்[1] [2]போதும் பிரிதலிலாக் காமஞ்**
**சுடுகாட் டெரியிற் சுடும்.**

(பற்றற்று இருக்கப் பழகல்இன்றிப் பல்நாளும்
குற்றம் இழைக்கும் குறையெதற்காம்? - வெற்றுப்
பிடிநீறாம் போதும் பிரிதல்இலாக் காமம்,
சுடுகாட்டு எரியின் சுடும்.) 5.

**பற்றற் றிருக்கப் பழகாவெம்[3] பாழ்நெஞ்சே**
**யெற்றுக் கிறையிறைஞ்சி யேங்குதலுங் - கற்றுத்**
**தெளிந்திருந்துஞ் செம்மைத் திறமில்லாய் தீதா**
**[4]மிளிவந்த வெண்ணலு மென்?**

(பற்றற்று இருக்கப் பழகாவெம் பாழ்நெஞ்சே,
எற்றுக்கு இறைஇறைஞ்சி ஏங்குதலும்? - கற்றுத்
தெளிந்துஇருந்தும் செம்மைத் திறம்இல்லாய்! தீதாம்
இளிவந்த எண்ணலும் என்?) 6.

**எத்தனைநா ளின்னு மிருப்போமோ விங்கென்று**
**நித்த நினைந்தயர்தல் நேரியதோ - பித்தரென**
**வின்று வருமோ வினிநாளை தான்வருமோ**
**வென்றின் றிடர்ப்படலோ நன்று.**

(எத்தனைநாள் இன்னும் இருப்போமோ இங்குஎன்று
நித்தம் நினைந்துஅயர்தல் நேரியதோ? - பித்தரென,
இன்று வருமோ? இனிநாளை தான்வருமோ?
என்றுஇன்று இடர்ப்படலோ? நன்று!) 7.

---

1. நீறு - சாம்பல். 2. போதும் - பொழுதும். 3. பழகாவெம் = பழகா + எம்; பழகா + வெம். வெம் = கொடிய, கடுமையான, வெம்மையான. 4. இளி - இகழ்ச்சி, குற்றம்.

## பேய்க்குணம்:

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**பெற்றவோர் பெண்ணைக் கொல்லும்**
**பேய்க்குணம் தாய்க்கா தந்தை**
**யுற்றுட னுதவ லுண்டா**
**உலகிய லிஃதோ யுண்மை**
**பற்றிலர் செயற்கு மஞ்சு**
**படுபழி பெற்றோர்க் கிங்கா**
**எற்றிவர் செய்கை யையோ**
**இயல்வதோ வறிந்தார் சொல்க!**

(பெற்றவோர் பெண்ணைக் கொல்லும்
பேய்க்குணம் தாய்க்கா? தந்தை,
உற்றுஉடன் உதவல் உண்டா?
உலகுஇயல் இஃதோ உண்மை?
பற்றுஇலர் செயற்கும் அஞ்சு
படுபழி பெற்றோர்க்கு இங்கா?
எற்றுஇவர் செய்கை, ஐயோ!
இயல்வதோ? அறிந்தார் சொல்க) 8.

## முட்டாள்!

**பாதையில் முட்டாள் பார்த்தும்**
**பாரார்போல் விலகிப் போவா**
**ரேதமங் கெழுமென் றெண்ணி**
**யெடுத்தெறி வேளை கண்கள்**
**காதலால் சுற்றும் யாரும்**
**காண்பவ ருண்டோ வென்று**
**வேதனை வெட்கம் வீணாம்**
**புகழ்ச்சியில் விழைவும் என்னே.**

(பாதையில் முள்தாள் பார்த்தும்
பாரார்போல் விலகிப் போவார்.
ஏதம்அங்கு எழுமென்று எண்ணி,
எடுத்துஎறி வேளை, கண்கள்
காதலால் சுற்றும், யாரும்
காண்பவர் உண்டோ என்று!
வேதனை, வெட்கம்! வீணாம்
புகழ்ச்சியில் விழைவும் என்னே!) 9.

## மூடர் மொழி!

(இன்னிசை வெண்பா)

**முற்ற முழுதுணரா மூடர் மொழிபவற்றைக்**
**குற்றங் குறைகளைந்து கொள்வர் குணமுடையார்**
**பெண்பாற் பெருகு பெருமதிப்பாற் பேசலுற்றேன்**
**நண்பால் நகாரே நயந்து.**

(முற்ற முழுதுஉணரா மூடர் மொழிபவற்றைக்
குற்றம் குறைகளைந்து கொள்வர் குணம்உடையார்!
பெண்பால் பெருகு பெருமதிப்பால் பேசல்உற்றேன்;
நண்பால் நகாரே நயந்து.) 10.

## வேண்டாவே!

(நேரிசை வெண்பா)

**உடனுறை நோயுயிரி யொப்பவிடர் தப்பார்**
**கடனிகர்வார் காசுபணங் காண்பார் - மடநிறைந்த**
**தீண்டா மனத்துச் சிறியர் தொடர்பென்றும்**
**வேண்டாவே விட்டிடுதல் மேல்.**

*(உடன்உறை நோய்உயிரி ஒப்பஇடர் தப்பார்!*
*கடன்நிகர்வார்; காசுபணம் காண்பார்! - மடம்நிறைந்த*
*தீண்டா மனத்துச் சிறியர் தொடர்புஎன்றும்*
*வேண்டாவே; விட்டிடுதல் மேல்!)* 11.

## பேறுற்றது என்னை!

***ஆறோ டெழுபத் தகவை யினுந்தொடரப்***
***பேறுற்ற தென்னை பிழையுளன்றான் - தேறுங்கால்***
***தீங்குபிறர்க் கெண்ணாத் திறனும் விளையாட்டு***
***மீங்கமையப் பெற்றமையால் [2]எண்.***

*(ஆறோடு எழுபத்து அகவை! இனும்தொடரப்*
*பேறுஉற்றது என்னை? பிழைஉளன்தான்! - தேறும்கால்,*
*தீங்குபிறர்க்கு எண்ணாத் திறனும் விளையாட்டும்*
*ஈங்குஅமையப் பெற்றமையால்! எண்.)* 12.

## இறப்பென்பது யார்க்கும் இயல்பு!

***எழுதமிக மேலுமெழு மென்றனுள வாசை***
***பழுதடைய மேவியதிப் பாழ்நோய் - விழுதெனவே***
***யுற்றா ருயர்மக்க ளுற்றுமெ னுண்ணோயே***
***[1]யெற்றா லெதிர்நிற்கு மீங்கு?***

*(எழுதமிக மேலும்எழும் என்றன்உள ஆசை;*
*பழுதடைய மேவியதுஇப் பாழ்நோய்! - விழுதுஎனவே,*
*உற்றார், உயர்மக்கள் உற்றும்என் உள்நோயே*
*எற்றால் எதிர்நிற்கும் ஈங்கு?)* 13.

1. *எற்றால் - எக்கரணியத்தால்.*

**இன்றோ டெழுபத்தே ழிற்ற தினியுமே**
**லொன்றா வுளநோய்க் குறுமருந்தே - குன்றேதா**
**னென்றாலுங் குன்று மெறும்பூர வென்றக்கா**
**லென்றா னெனக்கிங் கிழப்பு?**

*(இன்றோடு எழுபத்துஏழ் இற்றது இனியும்மேல்*
*ஒன்றா உளநோய்க்கு உறுமருந்தே - குன்றேதான்*
*என்றாலும் குன்றும் எறும்புஊர என்றக்கால்,*
*என்தான் எனக்குஇங்கு இழப்பு?)* 14.

**புற்றுநோ யுற்றதனாற் போவ துறுதியென்**
**றெற்றுக் கிடருழத்த [1]லேலாதே - சற்றுக்கேள்**
**ஈறி லுயிரினங்க ளென்றுமில் நன்றறிக**
**ஊறி லியற்கை யுணர்.**

*(புற்றுநோய் உற்றதனால் போவது உறுதிஎன்று*
*எற்றுக்கு இடர்உழத்தல்? ஏலாதே! - சற்றுக்கேள்!*
*ஈறுஇல் உயிர்இனங்கள் என்றும்இல்; நன்றுஅறிக!*
*ஊறுஇல், இயற்கை; உணர்.)* 15.

**ஏதேதோ வெண்ணி யிடருறு மென்னெஞ்சே**
**நீதான் புலம்ப நிகழ்வதுமென் - தீதேயாம்**
**[2]வீதாம் [3]விரைதரினும் வீழு மொருபொழுதி**
**லீதா மியற்கை யிருப்பு.**

*(ஏதேதோ எண்ணி இடர்உறும் மெல்நெஞ்சே!*
*நீதான், புலம்ப நிகழ்வதும்என்? - தீதே,ஆம்!*
*வீதாம் விரைதரினும் வீழும் ஒருபொழுதில்;*
*ஈதுஆம் இயற்கை இருப்பு.)* 16.

---

1. ஏலாதே - பொருந்தாதே. 2. வீ - மலர். 4. விரை - நறுமணம்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**அல்லவை யெல்லா நீங்க**
**வன்பரா யருளா லோங்க**
**நல்லதே நினைத்தல் வேண்டு**
**நயம்பட வுரைத்தல் வேண்டும்**
**சொல்வதை முடித்தல் வேண்டும்**
**சோர்வினைத் தவிர்த்தல் வேண்டு**
**மில்லவர்க் கீதல் வேண்டு**
**மின்முகத் தாதல் வேண்டும்.**

(அல்லவை எல்லாம் நீங்க,
அன்பராய் அருளால் ஓங்க,
நல்லதே நினைத்தல் வேண்டும்!
நயம்பட உரைத்தல் வேண்டும்!
சொல்வதை முடித்தல் வேண்டும்!
சோர்வினைத் தவிர்த்தல் வேண்டும்!
இல்லவர்க்கு ஈதல் வேண்டும்!
இன்முகத்து ஆதல் வேண்டும்!) 17.

## மேல் விட்டெறிந்த!

(நேரிசை வெண்பா)

**ஓதாத வோதி யுளைந்திடு மென்னெஞ்சே**
**தீதேதாம் தேடிச் சிதைப்பதுமென் - பேதாய்மேல்**
**விட்டெறிந்த யாவும் விரைந்துதரை வீழ்வதெனக்**
**கிட்டுநமை முன்விளைத்த கேடு.**

(ஓதாத ஓதி உளைந்திடும் மெல்நெஞ்சே
தீதேதாம் தேடிச் சிதைப்பதும்என் - பேதாய்மேல்
விட்டெறிந்த யாவும் விரைந்துதரை வீழ்வதுஎனக்
கிட்டும்நமை முன்விளைத்த கேடு.) 18.

## கூட வாரா!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**என்றோ வொருநா ளிறந்திடுவோ**
**மெதற்கிங் கதற்குள் வெறியாட்டம்**
**நன்றோ தீதோ நம்மாலே**
**[1]நவைகட் டாமு நாவாலே**
**குன்றாய்க் குவித்த பொருளெல்லாங்**
**கூட வாரா போகையிலே**
**சென்றா லுடன்யார் சேர்ந்திடுவார்**
**செய்க வன்பைச் சேர்முன்னே.**

(என்றோ ஒருநாள் இறந்திடுவோம்;
எதற்கிங்கு அதற்குள் வெறியாட்டம்?
நன்றோ? தீதோ? நம்மாலே!
நவைகள் தாமும் நாவாலே!
குன்றாய்க் குவித்த பொருள்எல்லாம்,
கூட வாரா போகையிலே!
சென்றால் உடன்யார் சேர்ந்திடுவார்?
செய்க அன்பைச் சேர்முன்னே!) 19.

## ஒத்தது அறியாரேல்?

(நேரிசை வெண்பா)

**எத்தனைதாஞ் செல்வ மிமயமென்றி யைந்திடினு**
**மொத்ததறி யாரே லுயர்வொன்றா - நித்தநித்த**
**மில்லார்க் கிடரறிந் தேற்ப விருந்துதவி**
**[2]னொல்லாருங் கொள்வ ருறவு.**

1. நவை - குற்றம், இழிவு. 2. ஒல்லார் - பகைவர்.

(எத்தனைதாம் செல்வம் இமயமென்று இயைந்திடினும்
ஒத்ததுஅறி யாரேல் உயர்வுஒன்றா! - நித்தம்நித்தம்
இல்லார்க்கு இடர்அறிந்து ஏற்ப இருந்துஉதவின்
ஒல்லாரும் கொள்வர் உறவு.) 20.

## உள்நாள் அமைதி மட்டே!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**நன்றளி பெற்றோர் நாளு**
**நன்னெறி யுய்க்குஞ் சான்றோ**
**ரின்பளி மனைவி மக்க**
**ளிடர்களை யுற்றார் சுற்ற**
**மன்பகத் துண்மை யாற்ற**
**லடையார்க்கு முதவு பண்பு**
**முன்னிடத் தமையி னுண்ணா**
**ளுறுபவ வமைதி மட்டே.**

(நன்றுஅளி பெற்றோர், நாளும்
நல்நெறி உய்க்கும் சான்றோர்,
இன்புஅளி மனைவி மக்கள்,
இடர்களை உற்றார் சுற்றம்,
அன்புஅகத்து உண்மை ஆற்றல்,
அடையார்க்கும் உதவு பண்பும்
உன்இடத்து அமையின், உள்நாள்
உறுபவ அமைதி மட்டே.) 21.

## எவர் அறிவார்?

(நேரிசை வெண்பா)

***இன்று வருமோ விலைநாளை தான்வருமோ***
***வென்று வருமென் றெவரறிவார் - [1]பொன்றிடுமுன்***
***நன்று மனத்தெண்ணி நல்லனா யெல்லார்க்கு***
***மின்றுணையா யென்று மிரு!***

*(இன்று வருமோ? இலைநாளை தான்வருமோ?*
*என்று வரும்என்று எவர்அறிவார்? - பொன்றிடும்முன்,*
*நன்று மனத்துஎண்ணி நல்லனாய் எல்லார்க்கும்*
*இன்துணையாய் என்றும் இரு!)* 22.

***இன்னா ரினிய ரிவரவரென் றெண்ணலின்றி***
***யுன்னா லியன்ற வுதவிடுக - நின்றார்***
***நிலைத்திங் கியாருமில்லை நெஞ்சத்தா யீர்நீர்***
***மலைத்துணையாய்ச் சேர்ப்பீர் [2]மருள்.***

*(இன்னார் இனியர் இவர்அவர்என்று எண்ணல்இன்றி,*
*உன்னால் இயன்ற உதவிடுக! - நின்றார்*
*நிலைத்துஇங்கு யாரும்இல்லை; நெஞ்சத்து ஆயீர்நீர்!*
*மலைத்துணையாய்ச் சேர்ப்பீர் மருள்.)* 23.

***ஆடாத வாட்டமெலா மாடி யலைந்தீற்றிற்***
***பாடாய்ப் படுகின்றீர் பன்னோயால் - கூடா***
***மனையிருந்துங் கூடி மகிழ்ந்திருக்க வாடி***
***வினையியலா தீங்கிருத்தல் வீண்.***

---

1. *பொன்றல் - அழிதல், இறத்தல்.* 2. *மருள் - மயக்கம்.*

*(ஆடாத ஆட்டம்எலாம் ஆடி அலைந்துஈற்றில்,*
*பாடாய்ப் படுகின்றீர் பல்நோயால்; - கூடா!*
*[1]மனைஇருந்தும் கூடி மகிழ்ந்துஇருக்க, வாடி*
*வினைஇயலாது ஈங்குஇருத்தல் வீண்.)* 24.

## நீர்மை:

(நேரிசை வெண்பா)

***யார்யாரோ சொல்வ ரெதையெதையோ வெல்லாமு***
***[2]நேர்மை யெனக்கொள்ளல் [3]நீர்மையிலை - சீர்தூக்கி***
***நற்பொருளைப் பற்றி [4]நவையிலராய்ப் பற்றிகந்***
***[5]துற்றுழி நிற்ற லுயர்வு.***

*(யார்யாரோ சொல்வர் எதைஎதையோ! எல்லாமும்*
*நேர்மை எனக்கொள்ளல் நீர்மைஇலை - சீர்தூக்கி*
*நல்பொருளைப் பற்றி நவைஇலராய்ப் பற்றுஇகந்து*
*உற்றஉழி நிற்றல் உயர்வு.)* 25.

## பிறர்க்கென?

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

***வாடிடு பயிரைக் கண்டு***
***வருந்திடு வுள்ளம் வேண்டும்***
***நாடிடு வெளியோர் தம்மின்***
***நலிவினைப் போக்கல் வேண்டும்***
***கூடிடு வுற்றோர் தம்மின்***
***குறைதமை நீக்கல் வேண்டும்***
***தேடிடு பொருட்கள் யாவும்***
***பிறர்க்கென வாக்கல் வேண்டும்.***

1. மனை - மனைவி. 2. நேர்மை - செம்மை, உண்மை. 3. நீர்மை - தன்மை, அழகு.
4. நவை - குற்றம், மாசு. 5. உற்றுழி = உற்ற + உழி: உழி = இடம், பக்கம்.

(வாடிடு பயிரைக் கண்டு
வருந்திடு உள்ளம் வேண்டும்!
நாடிடு எளியோர் தம்மின்
நலிவினைப் போக்கல் வேண்டும்!
கூடிடு உற்றோர் தம்மின்
குறைதமை நீக்கல் வேண்டும்!
தேடிடு பொருட்கள் யாவும்
பிறர்க்குளன ஆக்கல் வேண்டும்.) 26.

## எல்லார்க்கும் எல்லாமும்!

(குறள் வெண்பா)

***இல்லா ரிடரறிந்து மீயா வியல்புடையா
ரில்லாரே யென்னிருந்து மென்.***

(இல்லார் இடர்அறிந்தும் ஈயா இயல்புஉடையார்
இல்லாரே! என்இருந்தும் என்?) 27.

**எல்லாமு மெல்லார்க்கு மேற்ப வியலலிலேல்
[1]பொல்லாப்பே [2]போதும் புகும்.**

(எல்லாமும் எல்லார்க்கும் ஏற்ப இயலல்இலேல்,
பொல்லாப்பே போதும் புகும்.) 28.

1. பொல்லாப்பு - துன்பம். 2. போதும் - பொழுதும்.

## ஞானம் இன்றே!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**பொழுதினைப் போக்க லொன்றே**
**[1]புன்றொழில் பொய்மை இல்லை**
**யெழுதிய பொருட்கள் பல்ல**
**யின்றினி நீர்மை யல்ல**
**பழுதிலை மனத்துச் சற்றும்**
**பகையிலை யன்பே பற்று**
**மெழுந்திடுஞ் ஞான மின்றே**
**யிளமையி லிலையே நன்றே.**

(பொழுதினைப் போக்கல் ஒன்றே
புல்தொழில்; பொய்மை இல்லை!
எழுதிய பொருட்கள் பல்ல;
இன்றுஇனி நீர்மை அல்ல!
பழுதுஇலை மனத்துச் சற்றும்,
பகைஇலை; அன்பே பற்றும்!
எழுந்திடும் ஞானம் இன்றே!
இளமையில் இலையே, நன்றே!) 29.

## இனியும் வேண்டா.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**[2]கற்றுளீ ரெனினு மஞ்சிக்**
**கவலலென் கல்லில் மெய்தா**
**முற்றிய வீழ்தல் தேற்ற**
**முடிவிலாப் பொருட்க ளில்லை**
**யிற்றைநாள் பற்றைப் பற்றி**
**யிடர்ப்பட லினியும் வேண்டா**
**சுற்றுள வெதற்கும் யார்க்கும்**
**துணையென வன்பி லாழ்க!**

1. புன்றொழில் = புல் + தொழில். புல் - அற்பம், இழிவு. 2. கற்றுளீர் = கற்று + உளீர். உளீர் = உள்ளீர் - இடைக்குறை.

(கற்றுஉளீர் எனினும் அஞ்சிக்
கவலல்என்? கல்இல்; மெய்தாம்.
முற்றிய வீழ்தல் தேற்றம்;
முடிவுஇலாப் பொருட்கள் இல்லை.
இற்றைநாள் பற்றைப் பற்றி
இடர்ப்படல், இனியும் வேண்டா!
சுற்றுள எதற்கும் யார்க்கும்
துணைஎன அன்பில் ஆழ்க!) 30.

**வெற்றுடல் மூப்பின் வீழும்**
**விலக்கிலை வெதும்ப லின்னா**
**விற்றுயிர் நீங்கிற் கூடா**
**விருந்திடு செல்வம் சுற்றம்**
**மற்றுவா ழுயிர்க்குத் தீங்கு**
**மனத்திடத் தெண்ணல் மாண்பா**
**சுற்றிரு வுயிர்கட் டம்மின்**
**துயர்களைந் தன்பு செய்க.**

(வெற்றுடல் மூப்பின், வீழும்!
விலக்குஇலை; வெதும்பல் இன்னா!
இற்றுஉயிர் நீங்கின் கூடா
இருந்திடு செல்வம், சுற்றம்!
மற்றுவாழ் உயிர்க்குத் தீங்கு
மனத்துஇடத்து எண்ணல் மாண்பா?
சுற்றுஇரு உயிர்கள் தம்மின்
துயர்களைந்து அன்பு செய்க.) 31.

## பிதற்றிய போதும்!

[1]பெண்ணலார் அழகைப் போற்றிப்
பிதற்றிய போதும் வேண்டா
[2]தண்டலை மயிலைப் போற்று
தண்குரல் குயிலைப் போற்று
பண்புரை பாட்டாம் சங்கப்
பனுவலைப் படித்துப் போற்று
எண்டிசை எங்கும் தங்கும்
இன்றமிழ்ப் பொருளைப் போற்று.

(பெண்நலார் அழகைப் போற்றிப்
பிதற்றிய போதும்; வேண்டா!
தண்டலை மயிலைப் போற்று;
தண்குரல் குயிலைப் போற்று;
பண்புஉரை பாட்டாம் சங்கப்
பனுவலைப் படித்துப் போற்று;
எண்திசை எங்கும் தங்கும்
இன்தமிழ்ப் பொருளைப் போற்று!) 32.

## இலம் எனல் இழுக்கு!

(நேரிசை வெண்பா)

கோடிபல கூடினுங் கூடா மனமகிழ்
வோடி யுதவுதலா லுண்டாகு - நாடி
நலம்புரிய நன்மை நமக்கேயா நம்பு
மிலமென லென்று மிழுக்கு.

1. பெண்ணலார் = பெண் + நலார். நலார் = நல்லார் :- இடைக்குறை.
2. தண்டலை = சோலை.

(கோடிபல கூடினும் கூடா மனமகிழ்வு
ஓடி உதவுதலால் உண்டாகும்! - நாடி
நலம்புரிய, நன்மை நமக்கேயாம்! நம்பும்;
இலம்எனல் என்றும் இழுக்கு!) 33.

## புன்மைப் பசி!

**காவி யுடைகொண்டு [1]கானை யடைந்துதவ**
**மேவியிறை மேன்மையினை வேண்டினுமென் - ஆவதுவோ**
**நாவின் புலனடக்கி நன்னெறியி லுய்த்தலில்**
**பாவியாம் [2]புன்மைப் பசி!**

(காவி உடைகொண்டு கானை அடைந்துதவம்
மேவிஇறை மேன்மையினை வேண்டினும்என்! - ஆவதுவோ?
நாவின் புலன்அடக்கி, நல்நெறியில் உய்த்தல்இல்
பாவியாம் புன்மைப் பசி!) 34.

## உள்ளத்துயர்வு!

**வெற்றுக் [3]கிறையென்று வீணே பணம்பொழுதை**
**[4]யெற்றுக் கிறைத்திடலு மெண்ணிடுக - பற்றிகந்[5]**
**துற்றவர்க் குதவி யுயரறத்தைப் போற்றிவரி**
**னுற்றிடுமே யுள்ளத் துயர்வு.**

(வெற்றுக்கு இறைஎன்று வீணே பணம்பொழுதை
எற்றுக்கு இறைத்திடலும்? எண்ணிடுக! - பற்றுஇகந்து,
உற்றவர்க்கு உதவி உயர்அறத்தைப் போற்றிவரின்
உற்றிடுமே உள்ளத்து உயர்வு.) 35.

---

1. கான் - காடு. 2. புன்மை - சிறுமை, இழிவு, துன்பம். 3. இறை - கடவுள், தலைமை. 4. எற்று - எத்தன்மைத்து. 5. இகந்து - நீங்கி.

## பேறு!

**பேசா திருத்தற்றான் பேறென் றுணர்ந்தறிந்துங்**
**கூசாது பொய்சொல் குறைநிறையோ - காசார்நேர்**
**[1]கன்மார் கவினழகே காணாத கண்டதுபோ**
**[2]லென்மா ரிலவெல்லா மெண்.**

(பேசாது இருத்தல்தான் பேறென்று உணர்ந்துஅறிந்தும்
கூசாது பொய்சொல் குறைநிறையோ? - காசுஆர்நேர்
கல்மார் கவின்அழகே! காணாத கண்டதுபோல்
என்மார் இலஎல்லாம்; எண்.) 36.

## அவம் இல்லா வாழ்வாம்!

**எல்லார்க்கு மெல்லாமு மென்கின்ற வெண்ணமட்டு**
**மெல்லார்க்கு மென்று மிருக்குமெனிற் - பொல்லா**
**ரெவருமிங் கில்லை யெனுஞ்சூழ லெய்த**
**[3]வவமில்லா வாழ்வா மறி.**

(எல்லார்க்கும் எல்லாமும் என்கின்ற எண்ணம்மட்டும்
எல்லார்க்கும் என்றும் இருக்கும்எனின், - பொல்லார்
எவரும்இங்கு இல்லை எனும்சூழல் எய்த,
அவம்இல்லா வாழ்வுஆம் அறி.) 37.

## இனிய இயற்று!

**என்று மெவர்க்கு மிறையளவு மின்னலின்றி**
**நன்றேநா நாட நலம்பெருகு - நன்றதுவோ**
**கன்றுபசி காணக் கறந்துபால் காய்த்தருந்த**
**லென்று மினிய வியற்று.**

1. கன்மார் - கல்மார் = கல் ஒத்த மார்பு. 2. என்மார் = என்பார், என்று உரைப்பார். 3. அவம் = கேடு, பயனின்மை, வீண்.

*(என்றும் எவர்க்கும் இறைஅளவும் இன்னல்இன்றி*
*நன்றேநாம் நாட நலம்பெருகும்! - நன்றுஅதுவோ*
*கன்றுபசி காணக் கறந்துபால் காய்த்துஅருந்தல்?*
*என்றும் இனிய இயற்று.)* 38.

## இலானானேன்!

(நேரிசை வெண்பா)

***கூறற்குங் கூடாக் கொலைவெறிக் கூர்விழியார்***
***சீறிச் சினந்தார் சிதைந்திற்றேன் - தேறற்கில்***
***பெண்ணிற் பெருந்தகையார் பேணார் பிழம்பானா***
***ரெண்ணற் கிலானானே னென்.***

*(கூறற்கும் கூடாக் கொலைவெறிக் கூர்விழியார்*
*சீறிச் சினந்தார்; சிதைந்துஇற்றேன் - தேறற்குஇல்!*
*பெண்ணின் பெரும்தகையார் பேணார், பிழம்புஆனார்;*
*எண்ணற்கு இலான்ஆனேன்; என்?)* 39.

## நன்று ஒன்றா!

***குன்றன்ன செல்வமுன் கொட்டிக் குவிந்திடினு***
***மொன்றுநன் றொன்றா வொழுக்கமிலேல் - நன்றேகேள்***
***எல்லார்க்கு நல்லனாய் யார்க்கும் எளியனே***
***லொல்லாரு மேற்ப ருளத்து.***

*(குன்றன்ன செல்வம்முன் கொட்டிக் குவிந்திடினும்*
*ஒன்றுநன்று ஒன்றா ஒழுக்கம்இலேல்! - நன்றே,கேள்:*
*எல்லார்க்கும் நல்லனாய் யார்க்கும் எளியனேல்*
*ஒல்லாரும் ஏற்பர் உளத்து.)* 40.

# 4. தமிழ்ப்பால்

## எதை எதையோ!

(நேரிசை வெண்பா)

**எதையெதையோ பாட்டென் றெழுதுகிறார் காணப்**
**பதைபதைக்கு முள்ளமுறும் [1]பாடு - [2]சிதையனைய**
**நல்லதனித் தாய்மொழியில் நற்கருத்தை யாற்றொழுக்காய்ச்**
**சொல்வதினு முண்டோ சுவை?**

*(எதைஎதையோ பாட்டுஎன்று எழுதுகிறார், காணப்*
*பதைபதைக்கும்; உள்ளம்உறும் பாடு! - சிதைஅனைய!*
*நல்லதனித் தாய்மொழியில் நல்கருத்தை ஆற்றுஒழுக்காய்ச்*
*சொல்வதினும் உண்டோ சுவை?)* 1.

## அழகு எது?

(இன்னிசை வெண்பா)

**நிறைய வெழுதல் நிறைவா யெழுத**
**லறைக விவற்றி லழகெதா மாய்க**
**ஒருசில சீரி லுறுதகத் தம்முட்**
**கருதுவ ஈதல் கவின்.**

*(நிறைய எழுதல்; நிறைவாய் எழுதல்;*
*அறைக இவற்றில் அழகெதாம்? ஆய்க!*
*ஒருசில சீரில் உறுதகத் தம்முள்*
*கருதுவ ஈதல் கவின்)* 2.

1. பாடு - வருத்தம், கேடு. 2. சிதை - இழிசொற்கள்.

(நேரிசை வெண்பா)

**நன்றா மொருபாடல் நாளு [1]மெழுதவெண**
**வொன்றா வொருபொருளு முள்ளத்துக் - குன்றா**
**[2]வளமைநிறை நூற்கள் வனைந்ததமிழ் வாய்த்து**
**மிளமையிற் கல்லா விழிபு.**

(நன்றாம் ஒருபாடல் நாளும் எழுதஎண,
ஒன்றா ஒருபொருளும் உள்ளத்துக் - குன்றா
வளமைநிறை நூற்கள் வனைந்ததமிழ் வாய்த்தும்
இளமையில் கல்லா இழிபு.) 3.

## குறைகூறல் கொள்கை இல்!

**படித்தாழ்ந்து பார்க்காது பாராட்டும் பண்பிங்**
**கடுத்தவர்க் காகுமெனக் காகா - வெடுத்துக்**
**குறைகூறல் கொள்கையில் கூறுதமிழ்க் கூற்று**
**நிறைகாண நெஞ்சே நினை.**

(படித்துஆழ்ந்து பார்க்காது பாராட்டும் பண்பிங்கு
அடுத்தவர்க்கு ஆகும்எனக்கு ஆகா! - எடுத்துக்
குறைகூறல் கொள்கைஇல்; கூறுதமிழ்க் கூற்று
நிறைகாண! நெஞ்சே, நினை.) 4.

**எல்லார்க்கு மெல்லாமு மென்று மியைவதில்லை**
**வல்லார்க்கும் வாய்க்கும் வழியிடறல் - சொல்லாளர்**
**நல்ல நவின்றவற்றில் நைந்த நடுவிருப்பிற்**
**சொல்ப சுவைமிகற்கே சூழ்.**

(எல்லார்க்கும் எல்லாமும் என்றும் இயைவதுஇல்லை;
வல்லார்க்கும் வாய்க்கும் வழிஇடறல்! - சொல்ஆளர்,
நல்ல நவின்றவற்றில் நைந்த நடுவிருப்பின்,
சொல்ப சுவைமிகற்கே! சூழ்.) 5.

1. எழுதவெண = எழுத + எண; எண - எண்ண: இடைக்குறை. 2. வளமை - வளம், செல்வம்.

**உள்ள வுணர்வுதமை யொண்டமிழ்ப் பாட்டாக**
**வள்ளித் தரவிழையு மார்வலரே - [1]கள்ளவுளர்**
**தொல்லை தொடர்ந்திடினுந் தூயதமிழ் காத்துவரு**
**தொல்காப் பியமே துணை.**

(உள்ள உணர்வுதமை ஒள்தமிழ்ப் பாட்டாக
அள்ளித் தரவிழையும் ஆர்வலரே! - கள்ளஉளர்
தொல்லை தொடர்ந்திடினும் தூயதமிழ் காத்துவரு
தொல்காப் பியமே துணை.) 6.

## முடியாதது இல்!

(குறள் வெண்பா)

**பிறர்செய் படைப்பில் பிழைதமைச் சுட்டல்**
**சிறக்கவப்பாட் டென்றே தெளி.**

(பிறர்செய் படைப்பில் பிழைதமைச் சுட்டல்
சிறக்கஅப்பாட்டு என்றே தெளி.) 7.

**இயன்றளவு குற்ற மிலாதெழுத நல்லீர்**
**முயன்றால் முடியாத தில்.**

(இயன்றஅளவு குற்றம் இலாதுஎழுத, நல்லீர்!
முயன்றால் முடியாதது இல்.) 8.

**மற்றவர் செய்தவற்றில் மாற்றம் விழைவதலால்**
**குற்றங் களைவதுங் கோள்.**

(மற்றவர் செய்தவற்றில் மாற்றம் விழைவதுஅலால்
குற்றம் களைவதும் கோள்.) 9.

1. கள்ளவுளர் = கள்ளம் + உளர் - கள்ள மனத்தினர். உளர் - உள்ளர்: இடைக்குறை.

## இலக்கணம் முன்னர்!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**பிழைதமைச் சுட்டிக் காட்டல்**
**பிதற்றலா பேதை மைத்தா**
**வழுவுறை பாடல் தம்மை**
**வழுத்துவர் அறிந்தும் மேலா**
**விழவெழு மழவுங் கூட**
**விளங்கிடார் பிழைதா மீளு**
**மிழுக்குறாப் பாட்டா வேட்பி**
**னிலக்கண மறிக பாப்பின்.**

(பிழைதமைச் சுட்டிக் காட்டல்,
பிதற்றலா? பேதை மைத்தா?
வழுஉறை பாடல் தம்மை,
வழுத்துவர் அறிந்தும்; மேலா?
விழஎழும் மழவும் கூட!
விளங்கிடார்; பிழைதாம் மீளும்!
இழுக்குஉறாப் பாட்டா? வேட்பின்,
இலக்கணம் அறிக; பாப்பின்!) 10.

## ஒதுக்கிடுக!

(நேரிசை வெண்பா)

**எப்போதோ முன்னா ளெழுதிப் பதித்தவற்றை**
**யிப்போது முன்ன ரெடுத்திடுவேன் - தப்பாமோ**
**ஒப்பீ ரெனினீ ரொதுக்கிடுக வுட்கொளற்கு**
**முப்பாலா கொள்ளேன் முரண்.**

*(எப்போதோ முன்நாள் எழுதிப் பதித்தவற்றை*
*இப்போது முன்னர் எடுத்துஇடுவேன்! - தப்பாமோ?*
*ஒப்பீர் எனில்நீர் ஒதுக்கிடுக! உள்கொளற்கு*
*முப்பாலா? கொள்ளேன் முரண்.)* 11.

## பிழை!

***சற்று மிறையுணர்வு சாரான் கதைக்கமையச்***
***சொற்றமிழ் பாடிச் சுவைசேர்த்தன் - வெற்றே***
***யுழைக்காதுண் டேய்ப்ப ருருவமைத்தோ திட்ட***
***பிழைப்பதாம் பேணற் பிழை.***

*(சற்றும் இறைஉணர்வு சாரான் கதைக்குஅமையச்*
*சொல்தமிழ் பாடிச் சுவைசேர்த்தன்! - வெற்றே,*
*உழைக்காதுஉண்டு ஏய்ப்பர் உருவுஅமைத்துஓ திட்ட*
*பிழைப்பதாம்; பேணல் பிழை!)* 12.

## கடை விரித்தேன்; கொள்வார் இல்!

***என்ன வெழுதியென்ன வேறெடுத்தும் பார்ப்பரிலே***
***லின்னு மெழுதுவதா லென்னபயன் - நன்னூல்***
***பலகற்றுத் தேர்ந்து படைத்தநற் பாட***
***லுலகற்றுப் போதலும் உண்டு.***

*(என்ன எழுதிஎன்ன ஏறெடுத்தும் பார்ப்பர்இலேல்!*
*இன்னும் எழுதுவதால் என்னபயன்? - நல்நூல்*
*பலகற்றுத் தேர்ந்து படைத்தநல் பாடல்,*
*உலகுஅற்றுப் போதலும் உண்டு.)* 13.

***நாளுஞ் சிலபாடல் நாமெழுத லாகிடினுங்***
***[1]கோளிற் பொறியெனவே கூடாகும் - தாளு***
***மெழுதுகோற் றானு மிருப்பினுமிங் கெய்தா***
***பழுதில் கருத்தமைந்த பாட்டு!***

*(நாளும் சிலபாடல் நாம்எழுதல் ஆகிடினும்*
*கோள்இல் பொறிஎனவே கூடுஆகும்! - தாளும்*
*எழுதுகோல் தானும் இருப்பினும்இங்கு எய்தா*
*பழுதுஇல் கருத்துஅமைந்த பாட்டு!)* 14.

***எத்தனையோ வின்றெழுத வெல்லாமே நல்லவையோ***
***எத்துணைத் தென்றெணார்க் கேதுநலன்! - மொத்தத்தில்***
***வெற்றுக்குப் பாட்டெழுதல் வீணாம் விளைபயனென்***
***எற்றுக்கிவ் வேலை யிழிபு.***

*(எத்தனையோ இன்றெழுத, எல்லாமே நல்லவையோ?*
*எத்துணைத்து என்றுஎணார்க்கு ஏதுநலன்! - மொத்தத்தில்*
*வெற்றுக்குப் பாட்டுஎழுதல் வீணாம்; விளைபயன்என்?*
*எற்றுக்குஇவ் வேலை? இழிபு!)* 15.

***நாளுமொரு பாட்டு நலிந்தெழுத நன்மையென்ன***
***கோளும் [2]பிடிப்புமுடன் கூடலிலேல் - வாளும்***
***வரிசிலையும் வாய்த்தென்ன வன்மைநல மில்லா***
***[3]நரியுளராய் வாழ்தல் நலிவு.***

*(நாளும்ஒரு பாட்டு நலிந்துஎழுத நன்மைஎன்ன*
*கோளும் பிடிப்பும்உடன் கூடல்இலேல்? - வாளும்*
*வரிசிலையும் வாய்த்துஎன்ன? வன்மைநலம் இல்லா*
*நரிஉளராய் வாழ்தல் நலிவு!)* 16.

---

1. *கோள் = கொள்ளுகை, துணிபு.* 2. *பிடிப்பு = பற்றுகை, உறுதி, ஈடுபாடு.*
3. *நரியுளர் = நரி மனத்தர். உளர் - உள்ளர்:- இடைக்குறை.*

(இன்னிசை வெண்பா)

***யார்யார் படிக்கின்றா ரென்ன நினைக்கின்றார்***
***தேர்ந்து தெளியாதார் தீதினக லாதார்***
***கடைவிரித்தேன் கொள்வாரில் கண்டுரைத்தா ரான்றோர்***
***நடைமுறைக் கேற்றதே நாடு.***

*(யார்யார் படிக்கின்றார்? என்ன நினைக்கின்றார்?*
*தேர்ந்து தெளியாதார்! தீதின்அக லாதார்!*
*கடைவிரித்தேன் கொள்வாரில்; கண்டுஉரைத்தார் ஆன்றோர்!*
*நடைமுறைக் கேற்றதே; நாடு.)* 17.

## இடிப்பாரை இலாதான்:

(தரவு கொச்சகக் கலிப்பா)

***எழுதுகிறே னெண்ணியெண்ணி யென்னபய னெப்படியோ***
***பழுதிடையில் நுழைந்துவிடப் பழிக்கிடனாய்ப் [1]படருறுவேன்***
***[2]இழுமெனுமின் னிசையிழைய யியற்றமிழை யியற்றலின்றி***
***வழுவுணர்ந்து வரம்பறிந்து மறைந்துறைதல் மகிழ்வலவோ!***

*(எழுதுகிறேன் எண்ணிஎண்ணி; என்னபயன்? எப்படியோ,*
*பழுதுஇடையில் நுழைந்துவிடப் பழிக்குஇடனாய்ப் படர்உறுவேன்!*
*இழும்எனும்இன் இசைஇழைய இயல்தமிழை இயற்றல்இன்றி,*
*வழுஉணர்ந்து வரம்புஅறிந்து மறைந்துஉறைதல் மகிழ்வுஅலவோ!)*
18.

***படிப்பதற்கோ வெவருமிலை படைப்பதனாற் பயனுமெனை***
***இடிப்பாரை யிலாதவோ ரேமரா மன்னனென***
***நடிப்பவரே யருமையென நகைப்பவரே யருகிருந்து***
***[3]கெடுப்பருளேல் நாமகிழ்ந்து கீழ்மையுறல் வாய்மையலோ!***

---

1. படர் - வருத்தம், நோய். 2. இழும் - இனிமை, மென்மை. 3. கெடுப்பருளேல் - கெடுப்பர் + உளேல். உளேல் - உள்ளேல் :- இடைக்குறை.

*(படிப்பதற்கோ எவரும்இலை; படைப்பதனால் பயனும்எனை?*
*இடிப்பாரை இலாதஓர் ஏமரா மன்னன்என*
*நடிப்பவரே அருமைஎன நகைப்பவரே அருகுஇருந்து*
*கெடுப்பர்உளேல் நாம்மகிழ்ந்து கீழ்மைஉறல் வாய்மைஅலோ!)*
19.

***எழுதுகிறார் விழுப்பொருளை யிலக்கணப் பிழைநுழையப்***
***பழுதென்று தெரிந்திருந்தும் பலர்புகழ்வர் பண்பஃதே***
***வழுவென்று குறித்திடலால் வருபயனென் வருத்தமலா***
***லெழுதலிலை பிழைகாணி னினியென்று மிடரிலையே.***

*(எழுதுகிறார் விழுப்பொருளை இலக்கணப் பிழைநுழையப்*
*பழுதுஎன்று தெரிந்துஇருந்தும் பலர்புகழ்வர்; பண்புஅஃதே!*
*வழுஎன்று குறித்துஇடலால் வருபயன்என் வருத்தம்அலால்?*
*எழுதல்இலை பிழைகாணின்; இனிஎன்றும் இடர்இலையே.)*
20.

# 5. பிற பால்

## விழிப்புடன் இலை நாம் என்றால்?

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**இறையென விலாத கூறி**
**யேய்த்திவண் பிழைப்பீர் சொல்வீர்**
**பிறப்பினில் பிரிவை வைப்போன்**
**பெரியனோ விறையு மாமோ**
**குறத்தியை மணந்தோன் றானுங்**
**குலத்தினைக் கண்டா கொண்டான்**
**மலத்துறு பொன்னென் றாலும்**
**மடிமறைத் தேற்பீர் கூசீர்.**

(இறைஎன இலாத கூறி
ஏய்த்துஇவண் பிழைப்பீர், சொல்வீர்!
பிறப்பினில் பிரிவை வைப்போன்,
பெரியனோ? இறையும் ஆமோ?
குறத்தியை மணந்தோன் தானும்
குலத்தினைக் கண்டா கொண்டான்?
மலத்துஉறு பொன்என் றாலும்
மடிமறைத்து ஏற்பீர்; கூசீர்!) 1.

***கண்ணென்னும் பெண்ணல் லாரைக்***
***கணிகையர் கோவிற் கென்று***
***மண்ணொரு குலம்வ குத்து***
***மகிழ்ந்தது மிறையா நீரா***
***பெண்ணொரு போழ்துங் கல்வி***
***பெற்றிடல் குற்றம் என்றீர்***
***பண்பிலா மறையென் றோதிப்***
***பரப்புவீர் உழைத்தற் கில்லீர்.***

*(கண்என்னும் பெண்நல் லாரைக்*
*கணிகையர் கோவிற்கு என்று*
*மண்ஒரு குலம்வ குத்து,*
*மகிழ்ந்ததும் இறையா? நீரா?*
*பெண்ஒரு போழ்தும் கல்வி*
*பெற்றிடல் குற்றம் என்றீர்!*
*பண்புஇலா மறைஎன்று ஓதிப்*
*பரப்புவீர்; உழைத்தற் கில்லீர்.)* 2.

***உழைப்பவர் விளைவை யுண்டீ***
***ருழுதவ ருளர்யா ரும்முள்***
***பிழைப்பெலாம் பிறர்தம் வாழ்வில்***
***பிரிவினை வளர்த்தற் றாமே***
***செழிப்புடன் வாழ்வீர் யாரால்***
***செய்ந்நன்றி சிறிதும் உண்டா***
***விழிப்புட னிலைநா மென்றால்***
***வீழ்வதுந் தமிழி னந்தான்.***

(உழைப்பவர் விளைவை உண்டீர்;
உழுதவர் உளர்யார் உம்முள்?
பிழைப்புஎலாம் பிறர்தம் வாழ்வில்,
பிரிவினை வளர்த்தல் தாமே!
செழிப்புடன் வாழ்வீர் யாரால்?
செய்ந்நன்றி சிறிதும் உண்டா?
விழிப்புஉடன் இலைநாம் என்றால்
வீழ்வதும் தமிழ்இ னம்தான்.) 3.

## புலவர் புகழஞ்சலி!

**முதுபெருந் தமிழ்க்கோ ராசான்**
**முனிவிலும் முரணிப் பேசா**
**ரெதுவரி னெனினுந் தன்னி**
**னியல்பினி லிறையு மாறார்**
**புதுமலர்ப் பொலிவு கொண்ட**
**புன்னகை யரங்க நாத**
**பதமெதைத் தேடி யெப்பாற்**
**படர்ந்தனை படர்தா மிப்பால்.**

(முதுபெரும் தமிழ்க்குஓர் ஆசான்;
முனிவிலும் முரணிப் பேசார்!
எதுவரின் எனினும் தன்னின்,
இயல்பினில் [1]இறையும் மாறார்!
புதுமலர்ப் பொலிவு கொண்ட
புன்னகை அரங்க நாத,
பதம்எதைத் தேடி எப்பால்
படர்ந்தனை? படர்தாம் இப்பால்!) 4.

1. இறை - சிறுமை, அற்பம், சிற்றளவு.

## மற்றெதுவும் வேண்டா.

(நேரிசை வெண்பா)

**கற்றுத் தெளிந்து கறையிலராய்த் தாமமைந்து
நற்றமிழாய் யார்க்கு நலன்செய்க - பெற்றவரோ
டுற்றவர்க்கு மற்றவர்க்கு மூன்றுகோற் போலுதவின்
மற்றெதுவும் வேண்டாவிம் மண்.**

*(கற்றுத் தெளிந்து, கறைஇலராய்த் தாம்அமைந்து,
நல்தமிழாய் யார்க்கும் நலன்செய்க! - பெற்றவரோடு
உற்றவர்க்கும் மற்றவர்க்கும் ஊன்றுகோல் போல்உதவின்,
மற்றுஎதுவும் வேண்டாஇம் மண்.)* 5.

**என்னகவை யென்றாலு மெண்ணத்திற் பின்னமின்றி
யொன்றுமிக வேண்டிடுக வுண்மனத் - [1]தின்றெனா
வுண்ணிறைவு முள்ளவரை [2]யொல்கா வுதவன்புங்
கண்களெனக் கண்டிடவே காண்.**

*(என்அகவை என்றாலும் எண்ணத்தில் பின்னம்இன்றி,
ஒன்றுமிக வேண்டிடுக உள்மனத்து! - இன்றுஎனா
உள்நிறைவும் உள்ளவரை ஒல்கா உதவுஅன்பும்
கண்கள்எனக் கண்டிடவே காண்.)* 6.

## ஏங்கி இடருறல் என்?

(கொச்சகக் கலிப்பா)

**என்ன நடப்பதென்றென் னேங்கி யிடருறலு
மின்ன லிலாதிங் கெதுவு மியைவதில்லை
முன்ன ரழுகுழந்தை பின்னர்ப் பசியாறு
மின்ப மதுபோற்றா னேயு முழன்றிடத்தான்.**

---

1. இன்றெனா - இன்று + எனா - இல்லை என்னாத. எனா - என்னா: இடைக்குறை:
2. ஒல்கா - சுருங்காத, தளராத, நில்லாத

(என்ன நடப்பதுஎன்றுஎன் ஏங்கி இடர்உறலும்?
இன்னல் இலாதிங்கு எதுவும் இயைவதுஇல்லை.
முன்னர் அழுகுழந்தை பின்னர்ப் பசிஆறும்;
இன்பம் அதுபோல்தான் ஏயும் உழன்றிடத்தான்.) 7.

## போகுநாள் கண்டும்!

(நேரிசை வெண்பா)

**இற்றைநா ளென்னகவை யெண்பத் திரண்டெனினுஞ்**
**சற்றும் பொறுமைமனஞ் சார்தலிலை - உற்றுணர்ந்தும்**
**போகுநாள் கண்டும் பொறுமை பொருந்தலிலை**
**வேகுமென் னெஞ்சம் வெருண்டு.**

(இற்றைநாள் என்அகவை எண்பத்து இரண்டெனினும்
சற்றும் பொறுமைமனம் சார்தல்இலை - உற்றுஉணர்ந்தும்
போகும்நாள் கண்டும் பொறுமை பொருந்தல்இலை;
வேகும்என் நெஞ்சம் வெருண்டு.) 8.

## புன்மை!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**பொழுதினை வெற்றே போக்கும்**
**புன்மையால் முகநூல் புக்குப்**
**பழுதினை நாளும் சுட்டிப்**
**பகிர்ந்திடு பண்பு மேலா**
**விழுமிய விளைக்கு நூற்கள்**
**மிகையுள தமிழிற் கற்க**
**[1]இழுமிகு மின்பாட் டெல்லா**
**மேற்றத்தை யளிப்ப தாமே.**

1. இழுமிகம் = இழும் + மிகும்: இழும் - இனிமை, மென்மை.

(பொழுதினை வெற்றே போக்கும்
புன்மையால் முகம்நூல் புக்குப்
பழுதினை நாளும் சுட்டிப்
பகிர்ந்திடு பண்பு மேலா?
விழுமிய விளைக்கும் நூல்கள்
மிகையுள தமிழில் கற்க!
இழும்மிகும் இன்பாட்டு எல்லாம்
ஏற்றத்தை அளிப்ப தாமே.) 9.

(தரவு கொச்சகக் கலிப்பா)

**யாருமற்ற பாதையிலே யிலக்கெதுவு மில்லாமற்**
**சேருமிடந் தெரியாது செயலிழந்து செல்கின்றேன்**
**தேரிளங்கொங் கைமாதர் தேடியநற் செல்வமெல்லாம்**
**பாரிறந்து போகவுடன் படர்துணையாய் வருதலுண்டோ.**

(யாரும்அற்ற பாதையிலே இலக்குஎதுவும் இல்லாமல்,
சேரும்இடம் தெரியாது செயல்இழந்து செல்கின்றேன்.
தேர்இளம்கொங் கைமாதர், தேடியநல் செல்வம்எல்லாம்
பார்இறந்து போகஉடன் படர்துணையாய் வருதல்உண்டோ?)

10.

## சொற்றான் உண்டு!

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

**நிறைவெனுஞ் சொற்றான் உண்டு**
**நிலத்தினி லுற்றா ருண்டா**
**[1]கறையிலர் முற்றும் என்று**
**கண்டவ ருரைத்த துண்டா**
**இறைவனை யிறைஞ்சிக் கண்டா**
**ரிங்கெவர் யானோ வில்லை**
**குறைநிறை புலன்வாய்ப் பட்டுக்**
**[2]கோதென வலைவோங் கெட்டு.**

1. கறை - மாசு, குற்றம். 2. கோது - சக்கை.

*(நிறைவுஎனும் சொல்தான் உண்டு;*
*நிலத்தினில் உற்றார் உண்டா?*
*கறைஇலர் முற்றும் என்று*
*கண்டவர் உரைத்தது உண்டா?*
*இறைவனை இறைஞ்சிக் கண்டார்,*
*இங்குளவர்? யானோ இல்லை.*
*குறைநிறை புலன்வாய்ப் பட்டுக்*
*கோதுஎன அலைவோம் கெட்டு.)* 11.

## ***உண்டோ ஒழுங்கு?***

*(நேரிசை வெண்பா)*

***ஏதேதோ வெண்ணங்க ளெல்லாமே தொல்லைதாம்***
***தீதே யவைபயப்ப தேர்ந்துமெ - [1]னேதிலன்பாற்***
***பள்ளத்து நீராய்ப் பரவ தடுப்பிகந்***
***துள்ளத்திற் குண்டோ வொழுங்கு.***

*(ஏதேதோ எண்ணங்கள்; எல்லாமே தொல்லைதாம்!*
*தீதே அவைபயப்ப; தேர்ந்தும்என்? - ஏதுஇலன்பால்*
*பள்ளத்து நீராய்ப் பரவ தடுப்புஇகந்து!*
*உள்ளத்திற்கு உண்டோ ஒழுங்கு?)* 12.

## ***நீர்க்குமிழி வாழ்வு!***

***எப்படியோ விப்புவியி லெண்பத் திரண்டாண்டைத்***
***தப்பிப் பிழைத்தின்று தாண்டிட்டே - னப்படியு***
***நெஞ்சில் நிறைவில்லை நீர்க்குமிழி வாழ்வெனினு***
***மஞ்சுவனென் பற்றுவிட லற்று.***

1. *ஏதிலன் - ஏது + இலன் = குற்றம் இல்லாதவன். ஏது - குற்றம், ஏதம்.*

*(எப்படியோ இப்புவியில் எண்பத்து இரண்டுஆண்டைத்*
*தப்பிப் பிழைத்துஇன்று தாண்டிட்டேன்! - அப்படியும்*
*நெஞ்சில் நிறைவுஇல்லை; நீர்க்குமிழி வாழ்வுஎனினும்*
*அஞ்சுவன்என் பற்றுவிடல் அற்று.)* 13.

## நிலைநிறைவை நேர்!

***நாடிநரம் பெல்லா நலிவடைந் தோய்ந்தபினுங்***
***கூடிக் குலவக் குறித்திடுவாய் - கூடுவதோ***
***தேடி மனமுளைந்து தேய்ந்த வெலாம்போது***
***நீடு நிலைநிறைவை நேர்.***

*(நாடிநரம்பு எல்லாம் நலிவடைந்து ஓய்ந்தபினும்*
*கூடிக் குலவக் குறித்திடுவாய் - கூடுவதோ*
*தேடி மனம்உளைந்து தேய்ந்த எலாம்போதும்*
*நீடு நிலைநிறைவை நேர்.)* 14.

## என்றோ எழுதிய!

*(குறள் வெண்பா.)*

***என்றோ வெழுதிய வின்றேனா விட்டிடுவேன்***
***நன்றாவ வென்றே நயந்து.***

*(என்றோ எழுதிய இன்றுஏனா இட்டிடுவேன்*
*நன்றாவ என்றே நயந்து.)* 15.

(நேரிசை வெண்பா.)

**என்றோ வெழுதிய வின்று படித்ததனால்**
**நன்றா மெனச்சில நானிடுவன் - ஈன்றோர்க்கிங்**
**கெல்லாரு நல்லாரே யென்று மினியாரே**
**சொல்லார் தவறென்று சூழ்.**

(என்றோ எழுதிய இன்று படித்திடலால்,
நன்றாம் எனச்சில நானிடுவன்! - ஈன்றோர்க்குஇங்கு
எல்லாரும் நல்லாரே! என்றும் இனியாரே!
சொல்லார் தவறென்று; சூழ்.) 16.